Vol.38 Issue No.17 2025 ஜூன் 14-17 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே'

நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்



## அமித்ஷாவை சந்தித்த கிரிமினல்!

Big Breaking

# ஈஷாவில் உடல் உறுப்பு திருட்டு?





## மீண்டும் ஆவேசம்!

**Big Breaking**

# ஈஷாவில் உடல் உறுப்பு திருட்டு?





ஜேக்கப் பி மெட்டா

கடந்த வருடம் ஜனவரி 5-ஆம் தேதியன்று '971, ஈஷா லேன், மெக்மின்வில்லே, அமெரிக்காவின் டென்னஸி' பகுதியில் அழுகி சிதிலமடைந்த நிலையில் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. முன்னாள் ராணுவ வீரனுக்குச் சொந்தமான அந்த சடலத்தில் குறிப்பிட்ட சில உடல் உறுப்புக்கள் மட்டும் காணவில்லை. அந்த கொலைக்கான காரணம் இன்றுவரை அறியப்படவில்லை என்றாலும் அதனைப்போலவே பலரும் மாயமாகி உயிரிழந்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் உடல் உறுப்புக்கள் மிஸ்ஸிங். அத்தனை நபர்களையும் இணைப்பது ஈஷா என்பதுதான் சர்ச்சைக்கு வித்திட்டுள்ளது.

வனத்தை அழித்தல், ஆதிவாசிகள் நிலம் அபகரித்தல், போதை வஸ்துகள், கற்பழிப்புகள் மற்றும் மர்ம மரணங்கள் வரிசையில், இது இல்லைன்னா எப்படி என்பதுபோல உடல் உறுப்புத் திருட்டிலும் ஈஷா ஈடுபடுகிறதா? என்கின்ற புதிய சர்ச்சையிலும் சிக்கியுள்ளது ஜக்கி வாசுதேவின் ஈஷா யோகா மையம். அமெரிக்காவில் மாயமான பலரும் டென்னஸி பகுதியிலுள்ள ஈஷா யோகா மையத்தில் இன்னர்வீல் எஞ்சினியரிங் எனும் யோகாவை கற்கவந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேக்கப் பி மெட்டா. நாஷ்வில்லி, டென்னஸி மாகாணத்தைச் சேர்ந்தவர். ஆப்பிள்டன் வடக்கு ஹைஸ்கூலில் பட்டம் பெற்ற இவர் 2014-ஆம்



அமெரிக்கா டென்னஸி ஈஷா மையம்

www.nakkheeran.in




ஜேக்கப் -காணவில்லை விளம்பரம்

## தமிழ்நாட்டில் 18 போலீஸ் உயர் அதிகாரிகள் இடமாற்றம்

ஆண்டு முதல் அமெரிக்க ராணுவத்தில் பணியாற்றியவர். ராணுவப் பணி ஓய்விற்கு பின் லிப்ட் ஆப்ரேட்டர், ட்ராப்ட்ஸ் மேன் என பல வேலைகளைச் செய்து வந்திருக்கின்றார். மலையேறுவதும், மலையேறி அங்கேயே தங்குவதும் இவரது பொழுதுபோக்கு. இடையிடையே இவர் உடல் உறுப்புத் திருட்டுக் களில் பங்கேற்றுள்ளார் என் கின்றது இவர் மேலான குற்றப் பத்திரிகை.


கடந்த 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், இரண்டி லிருந்து மூன்று வாரங்கள் அப்பலாச்சியன் மலையில் தங்கப்போகின்றேன் என தனது தங்கையிடம் கூறிச்சென்ற ஜேக்கப் பி மெட்டா அதன்பின் மாயமாகியுள்ளார். இவரைத் தேடி அங்குள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுத்துக் காத்திருந்தனர் இவரது குடும்பத்தினர். ஆனால் பலனில்லை. இதே டென்னஸி மாகாணத்தைச் சேர்ந்த தனியார் துப்பறியும் நிபுணரான Chloe என்பவரை இவரது குடும்பத்தினர்கள் அணுகிய நிலையில் நவம்பர் மாதம் இந்த வழக்கு மீண்டும் உயிர்பெற்றது. தனியார் துப்பறியும் நிபுணரும், டென்னஸி மாகாண போலீஸும் தொடர்ச்சியாக தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட 2024 ஜனவரி 5-ஆம் தேதியன்று ஈஷா யோகா மையத்திற்கு சொந்தமான பகுதியில் அவருடைய வாகனத்துடன் அழுகி சிதிலமடைந்த நிலையில் அவரது உடல் மீட்கப்படுகின்றது.

'மதியம் 1.24 மணியளவில் மீட்கப்பட்ட ஜேக்கப் பி மெட்டாவின் தண்டுவடப் பகுதியில் ஈ5, ஈ6 எலும்புகளும், இடதுபக்க விலா எலும்பான ரிப் 10 உட்பட இரண்டு எலும்புகள் மற்றும் வலதுபக்க விலா எலும்பான ரிப் 12 உள்ளிட்ட எலும்புகள் உடலில் இல்லை. பல்வரிசை இறுக்கமாக அமைந்துள்ளது. உடலில் துப்பாக்கி வைப்பதற்கான பகுதி இருந்தது. அருகிலேயே பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டு இருந்தது. ஆனால் உடலில் துப்பாக்கிக் குண்டால் ஏற்பட்ட காயம் இல்லை. உடலில் விஷம், மது, போதை வஸ்துகள் பயன்படுத்தப்பட்டதை அறிய இயலவில்லை. எவ்வித காயமும் இல்லை. உடலை ஆய்வுசெய்ய இயலாத அளவிற்கு உடல் சிதைந்த நிலையில் காணப்பட்டது. இறப்பு முன்னரே நடந்திருக்கவேண்டும். சிதிலமடைந்த உடல் ஜேக்கப் பி மெட்டாவினுடையதா என்பதனை அறிய உடன்பிறந்தவர்களின் டி.என்.ஏ.வை பரிசோதனை செய்து உறுதிசெய்யப்பட்டது' என்கின்றது மே 7, 2024 அன்று தடயவியல் நிபுணர்கள் எரின் எம்.கார்னி, டிப்பனி பி.சால் ஆகியோரின் அறிக்கை.

இதற்கிடையில், "ஜேக்கப் பி மெட்டாவைப்போல் மாயமாகியவர்கள் பலர். ஜேக்கப் பி மெட்டா ஆர்கன் திருட்டில் சம்பந்தப்பட்டவன். அவனே அதில் பலியாகியுள்ளான். அதுபோல் ராணுவத்தில் இருக்கும்போதே மனஅழுத்தத்தில் இருந்த ஜேக்கப் பி மெட்டா, அதற்கான மருந்துகளை தொடர்ச்சியாகப் பயன்படுத்திவந்துள்ளான். இதேவேளையில் அவனது உடல் கண்டுபிடிக்கப்பட்டது ஈஷா யோகா மையப் பகுதி. அதாவது, அப்பலாச்சியன் மலைப்பகுதி. முன்னதாக அதே ஈஷா யோகா மையத்தில் அவன் இஞ்சினியரிங் ஆப் இன்னர்வீல் சைன்ஸ் எனும் யோகா வகுப்பை கற்று வந்திருக்கின்றான். எனவே ஈஷாமீது சந்தேகம் வலுப்பெறுகின்றது" என்கின்றார் தனியார் துப்பறியும் நிபுணரான Chloe.

இது இப்படியிருக்க, அமெரிக்கா டென்னஸி பகுதியில் இருக்கும் ஈஷா யோகா மையத்தில் பணிபுரியும் துறவிகள் இருவர் தங்களுக்கு இடையேயான பிரைவேட் சாட்டில் "ஈஷாவில், மக்களை கோமாவில் வைத்துள்ளதாகவும், அத்துடன் அவர்களது சிறுநீரகங்களைத் திருடுவதாகவும் கேள்விப்பட்டோம். இதுபற்றி





உங்களின் கருத்து என்ன?'' என ஒருவர் கேட்க "உண்மையாகவா? திருடிய சிறுநீரகங்களை வைத்து அவர்கள் என்ன செய்வார்கள்? நம் வலைத்தளத்தில் அதை விற்றுவிடுவார்களா? உண்மையைக் கண்டறியுங்கள்" என்றிருக்கின்றார் மற்றொருவர்.

"இருவருக்கிடையே நடந்த அந்த உரையாடல் உண்மையே! அமெரிக்கா டென்னஸி பகுதியிலுள்ள ஈஷாவினைப் பொறுத்தவரை அங்கு யார் வேண்டுமானாலும் உள்ளே வரலாம். ஆனால் வெளியில் செல்வது கடினம். முதலில் இன்னர்வீல் இஞ்சினிரியங்கிற்காக உள்ளே வருபவர்கள் அங்கேயே அடிமையாகி பித்துப் பிடித்தவர்கள்போல் திரிவார்கள். பின்னாளில் நோயாளிபோல் கோமா நிலைக்குச் சென்றுவிடுவது இங்கு வாடிக்கையான ஒன்று. அதன்பின் அவர்களிடமிருந்து உடலுறுப்புக்கள் திருடப்படுகின்றன. உடல் உறுப்புக்களை பறிகொடுத்து இறப்பவர்கள் எதனால் இறந்தார்கள் என்பதைக் கண்டறிவது காவல்துறைக்கு சவாலான ஒன்று. இப்பொழுதுதான் இதுகுறித்து அமெரிக்கா டென்னஸி மாகாண மக்களிடம் விழிப்புணர்வு வருகின்றது. விரைவில் ஜக்கி வாசுதேவின் ஈஷா யோகா மையத்தில் நடக்கும் தகிடுதத்தங்களை உலகம் அறியும்" என்கின்றார் தற்பொழுது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் முன்னாள் ஈஷா பணியாளர் ஒருவர்.

இதேவேளையில் அமெரிக்காவின் டென்னஸி மாநிலம், வாரன் கவுண்டியில் வெளிவரும் மெக்மின்வில்லே நியூஸ்பேப்பர் என்ற பத்திரிகையோ, 'மெக்மின்வில்லே, டென்னஸி பகுதியில், ஈஷா யோக நிறுவனம் முதல்கட்டமாக 25,000 குடியிருப்பாளர்கள் வசிப்பதற்கான 10,000 வீடுகள் கட்ட திட்டமிட்டுள்ளது. அதுபோக, 18 கோல்ஃப் மைதானம் கட்டப்படுகின்றது. ஈஷாவின் 2022-ஆம் ஆண்டுக்கான வருமானம் மட்டும் $40,666,829. அதாவது இந்திய மதிப்பில் 347 கோடியே 25 லட்சத்து 40 ஆயிரத்து 528 ரூபாய்' என்றுள்ளது. இது அமெரிக்க வருமான வரித்துறைக்கு தெரிய வர தற்பொழுது ஈஷாவிற்கு நோட்டீஸ் விடப்பட்டுள்ளது.

உடல் உறுப்புத் திருட்டில் ஈஷா யோகா மையத்திற்கு சம்பந்தமிருக்கலாம் என்கின்ற கோணத்தில் விசாரணை ஒருபுறம் நடைபெற, மறுபுறம் 'நாகமாணிக்க கல் மோசடி' குறித்தும் விசாரணையைத் துவக்கியுள்ளது டென்னஸி மாகாண காவல்துறை.

ஈஷா மையம் குறித்த அமெரிக்க செய்தி



WARREN FIRST

The Local Voice

SCAN TO PAY...

VOL. 6, NO. 1 — YOUR STORIES, YOUR OPINIONS, AND YOUR EVENTS — 2 JUNE 2025

ISHA UNDER THE MICROSCOPE:
BENEVOLENCE OR HIDDEN AGENDA

BY VANESSA MILLER

A simple article into local nonprofit ISHA and their ever-growing impact on Warren County has uncovered worldwide controversy surrounding the organization and their founder. After ISHA construction lead, Eli Vinikovsky, reported to the Southern Standard they plan to build 10,000 additional housing units and host an additional 25,000 residents and going on to say " with the influx of population coming here to live, there is going to be commercial infrastructure.......An 18 hole golf course is being developed right now." The community wanted to know more.

Questions like, why is non-profit organization building its own city? How is building a golf course and quarrying rocks supporting their mission of saving the soil? Since this is a non-profit organization do they pay enough taxes to cover the strain on the roads and public utilities that they are currently using and for 25,000 more residents on Harrison Ferry Mountain? Is the 15,000+ acres they own across Van Buren, Warren, and Sequatchie counties having a positive effect on the local community? These questions led us to wonder is ISHA really a non-profit organization or a brilliant business plan to develop a city for private members (or volunteers as they call themselves). This inspired our last article and for weeks you have been asking for an update.

What we have learned about taxation is they are responsible for more taxes than they are currently paying to Warren and surrounding counties including things like hotel tax, property taxes and sales and use tax on the services provided. Our local property accessor and her team have worked diligently to make sure ISHA is paying their share fair of property taxes and not using loopholes in the non-profit code. They currently pay $299,684.00 in Warren County property taxes. They have over $15 million in exempted properties. There is more work to be done. In 2022 ISHA's reported revenue was $40,666,829.00 (yes that is $40 million) and only $3,822,609 went toward their mission statement with $3.2 million going abroad to undocumented entities and less than $600,000.00 staying in the U.S. Global donations are not a problem but it is standard practice for U.S. tax code to list the recipient organization or person. This information was taken from their 990 Form. Leading us to ask again, is this non-profit or a private business and should they be paying more taxes on this income.

We have also learned ISHA and their founder is surrounded by worldwide controversy, including the recent human remains of a young man being found near 971 ISHA Lane, McMinnville, TN on January 25, 2024. Past controversies include being charged with his wife's unusual death in 1997, alleged accusations of murder for hire of his rival guru Nithyanada in 2010, and dozens of former staff members alleging misconduct including brainwashing and sexual misconduct. ISHA was recently featured in an article by prominent cult reporter, Be Scofield, raising further questions about what ISHA really is.

why they chose middle Tennessee and why controversy surrounds ISHA in India, The United States and Canada? Confidentiality agreements between volunteers and ISHA include statements saying "The Volunteer does hereby waive any moral rights that the Volunteer may have with respect to the Confidential Information" raise even more questions about why a good non-profit organization doing wonderful things needs to be kept so secret? What happens to the individuals that move here for ISHA and don't meet the requirements? If ISHA wanted privacy and anonymity, why did they form a non-profit organization? One must also wonder why an individual who says "This life for me is an endeavor to help people experience and express their divinity" can be surrounded by so much controversy and how building an exclusive yogic city for members is serving the community or saving the soil.

There is still much to be learned about ISHA and their role in our local community as a non-profit organization.

GATEWAY

Randall Walker Farms
931-635-9535

HKN140625





டிடெக்டிவ் சோலி

சமீபத்தில் ஜக்கி வாசுதேவ், "நாகமணி என்றால் என்ன? நாட்டுப்புறக் கதைகளின்படி, நாகமணி என்பது ஒரு அரிய ரத்தினம், தென்னிந்தியாவில் அரக்கு நிறமுள்ள நாகப்பாம்பில்தான் இது கிடைக்கும். அந்த நாகப்பாம்பு வயதாகும்போது ஒரு நாகப்பாம்பின் நெற்றியில் உருவாகிறது. இது இருட்டில் ஒளிரும், பூச்சிகள் மற்றும் சிறிய விலங்குகளை ஈர்க்கிறது, ஒரு பாம்பு உண்மையில் ஒரு ரத்தினத்தை உருவாக்கமுடியுமா? ஒரு நாகப்பாம்பு வயதாகும்போது,



நில அபகரிப்பு வழக்கு: முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் நேரில் ஆஜராக உத்தரவு

ஜேக்கப் பிமெட்டாவின் பாரன்ஸிக் ரிப்போர்ட்



OFFICE OF THE MEDICAL EXAMINER
Center for Forensic Medicine
Nashville, Tennessee

REPORT OF INVESTIGATION BY COUNTY MEDICAL EXAMINER

Van Buren County Medical Examiner: Ty Webb M.D.
Judicial District Number: 31
District Attorney: Honorable Chris Stanford

State Number: 24-88-0001
Case Number: MEC24-0058


| Name of Decedent | Age | Race | Date of Birth | Sex |
|---|---|---|---|---|
| Jacob Peter Mata | 27 Years | White | 04/14/1996 | Male |

Address
DL: 7000 Harris Hills Lane, Apartment 314, Nashville, TN 37211

| Date of Death | Type of Death | Investigating Agency/Complaint # |
|---|---|---|
| 01/05/2024 1:24 PM | Death NOS (Not Otherwise Specified) | Van Buren County Sheriff |

Place of Death
near 971 Isha Lane, McMinnville, TN

Narrative Summary
Reportedly these not yet positively identified skeletal remains were discovered outdoors on 01/05/2024. 911 was called and Van Buren County Sheriff's Office and Van Buren County EMS responded to the scene. Asystole was confirmed upon arrival by Van Buren MEI Tiwanna Bricker at approximately 1324 hours on 01/05/2023. On behalf of the Van Buren County Medical Examiner's Office, Dr. Ty Webb ordered an autopsy to determine the cause and manner of death. The decedent was transported to the Center for Forensic Medicine by Middle Tennessee Removal Services. Final disposition arrangements were not known at the time of this report.




உடல் உறுப்பு திருட்டு குறித்து ஈஷா மையத்திலுள்ளவர்களின் தனிப்பட்ட சாட்

'முன்புபோலவே வேட்டையாடப் போராடுகிறது. உயிர்வாழ, அது மிகவும் சிக்கலான புரதச் சேர்மங்களில் ஒன்றான அதன் விஷத்தை சேமிக்கத் தொடங்குகிறது. காலப்போக்கில், இந்த விஷம் படிகமாகி, நட்சத்திர ஒளியில் ஒளிரும் அதன் நெற்றியில் நீல, பச்சைநிறப் பொருளை உருவாக்குகிறது. இது இரையை ஈர்க்கிறது, அதன் பலவீனமான நிலையிலும் நாகப்பாம்பு உணவுதேட அனுமதிக்கிறது. நாகமணியை வேட்டையாடி கல்லை எடுக்கின்றனர். அது தவறு. அதுவாக உதிர்ந்தால்தான் அதற்கு மதிப்பு. நாகமணி செல்வத்தையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளையும் தருகிறது என்று பலர் நம்புகிறார்கள். அதை வைத்திருப்பது ஒரு நபரை பாம்புக்கடியிலிருந்து பாதுகாக்கிறது என்று சிலர் கூறுகின்றனர். இருப்பினும், நாகமணி என்று அழைக்கப்படுவது ஒரு விஷப் படிகம், ஒரு மந்திர ரத்தினம் அல்ல. பல்வேறு கலாச்சாரங்களில், பாம்புகள் ஞானத்துடனும் ஆன்மீக விழிப்புணர்வுடனும் தொடர்புடையவை. மனிதர்களில் உள்ள பீனியல் சுரப்பி, 'மூன்றாவது கண்' என்றும் அழைக்கப்படுகிறது. இது நாகமணியின் பண்டைய நம்பிக்கையுடன் தொடர்புடையது. சில பாம்புகளுக்கு பீனியல் ஃபோரமென் எனப்படும் ஒளி உணர்திறன் சுரப்பி இருக்கிறது. இது பௌதிக உலகத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களை உணர அனுமதிக்கிறது. பாம்புகள், குறிப்பாக நாகப்பாம்புகள், சில ஆற்றல்களுக்கு ஏன் எதிர்வினையாற்றுகின்றன என்பதை இது விளக்குகிறது. யோகா மற்றும் மாயவாதத்தில், பாம்பு உடல் வரம்புகளுக்கு அப்பாற்பட்ட விழிப்புணர்வைக் குறிக்கிறது" என அவரே விளக்கமளிக்கிறார்.

ஏன் நாகமாணிக்கக்கல் குறித்து ஜக்கி வாசுதேவ் அழுத்தமாக போதிக்க வேண்டும்? பாம்பைக் கொன்று நீங்கள் அதனை எடுக்க முடியாது. வயதான பாம்பு அந்தக் கல்லை அதுவாக உதிர்த்தால் மட்டுமே அந்த நாகமாணிக்கக்கல்லிற்கு பவர் இருக்கும் என்கின்றார். தென்னிந்தியாவிலுள்ள பாம்பு என்கின்றார். அது கோவையிலுள்ள ஈஷாவில்தான் கிடைக்கும் என்பதற்கான சமிக்ஞை. அதாவது அது என்னிடம்தான் இருக்கின்றது என்பதற்கான வார்த்தை அது. கோடிக்கணக்கான ரூபாய் விலைவைத்து அதனை விற்பனை செய்துவருகின்றார் ஜக்கி வாசுதேவ். அதனை வாங்கினால் மூன்றாவது கண் திறக்கும் என விற்பனை ஜரூராக நடக்கின்றது. ஆனால் அது இந்தியாவில் அல்ல! வெளிநாடுகளிலுள்ள அவரது ஆசிரமங்கள் வாயிலாகத்தான் அந்த விற்பனை நடக்கின்றது. அந்த நாகமாணிக்கக்கல்லை வாங்கியவர்களுக்கு ஒன்றும் நடக்கவில்லை என்பதால் சமீபத்தில் ஜக்கியிடம் முறையிட்டிருக்கின்றார்கள். அமைதியாக இருங்கள். அதனைப் பயன்படுத்த சில விதிமுறைகள் இருக்கின்றது. விரைவில் அதனை உங்களுக்கு சொல்லித் தருகின்றேன் என்றிருக்கின்றார். இது அரசல்புரசலாக வெளியான நிலையில் இதுகுறித்தும் விசாரணையை துவக்கியிருக்கின்றது காவல்துறை" என்கின்றார் அமெரிக்காவில் வசிக்கும் முன்னாள் பக்தை ஒருவர்.

ஆனால், நாகமாணிக்கக்கல் என ஒன்றும் இல்லை என்கின்றது அறிவியல். ஜக்கி வாசுதேவ் சிக்குவாரா..?

-நாகேந்திரன்

மதுரையில், தோழி படிக்கும் பள்ளியில் சேர்க்காததால் 9-ம் வகுப்பு மாணவி தற்கொலை

# மீண்டும் ஆவேசம்!

பாட்டாளி மக்கள் கட்சியில் அப்பாவுக்கும், மகனுக்குமிடையே நடக்கும் அதிகார மோதல்கள் முற்றுப்பெறாத நிலையிலும், தூதுவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ள நிலையிலும் மீண்டும் வெடித்திருக்கிறார் ராமதாஸ்.

அன்புமணியின் அரசியல் செயல்பாடுகளில் அதிருப்தியடைந்த பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து அன்புமணியை கீழிறக்கி, செயல் தலைவராக அவரை நியமித்தார். 'என்னை நீக்கும் அதிகாரம்; பொதுக்குழுவுக்குத்தான் இருக்கிறது, வேறு யாருக்கும் இல்லை' என்று ராமதாசுக்கு அதிரடி காட்டினார் அன்புமணி.

பா.ஜ.க. ஆதரவாளர் ஆடிட்டர் குருமூர்த்தியும், அ.தி.மு.க.வின் சைதை துரைசாமியும் தைலாபுரம் தோட்டத்தில் டாக்டர் ராமதாசை சந்தித்து சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அன்புமணிக்கு எதிராக சில நிபந்தனைகளை விதித்தார் ராமதாஸ். அதற்கு 'அன்புவிடம் பேசி ஒப்புக்கொள்ள வைக்கிறோம்; நீங்கள் சென்னைக்கு வாருங்களேன்' என்று அழைத்தார் குருமூர்த்தி. சென்னைக்கு வர ஒப்புக்கொண்டார் ராமதாஸ்.

சென்னைக்கு வந்த ராமதாஸ் கோட்டூர்புரம் இல்லத்தில் 3 நாள் தங்கினார். அவரிடம் குருமூர்த்தி பேச்சுவார்த்தை நடத்தியும் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன' என்கிறார்கள் பா.ம.க.வினர்.

இதுபற்றி ராமதாஸுக்கு நெருக்கமானவர்கள் தரப்பில் விசாரித்தபோது, "தைலாபுரம் தோட்டத்தில் அய்யா ராமதாசை தூதுவர்கள் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையில் சில நிபந்தனைகள் சொல்லப்பட்டன. அதில், 'அன்புமணிக்கு மீண்டும் தலைவர் பொறுப்பு கொடுத்துவிடலாம்; ஆனால், ராமதாஸுக்கு தெரியாமல் எந்த அரசியல் நிலைப்பாடுகளும் அன்புமணி எடுக்கக்கூடாது. அன்புமணியால் ஓரங்கட்டப்பட்ட சீனியர்களை மீண்டும் கட்சிக்குள் கொண்டுவந்து அவர்களுக்கு பொறுப்புகள் வழங்குவதை அவர் பிரச்சினை ஆக்கக்கூடாது. தனித்து இயங்கும் அதிகாரம் அவருக்கு இல்லை. கலந்தாலோசித்துத் தான் முடிவுகள் எடுக்கவேண்டும். கூட்டணி அரசியல் குறித்து அய்யா ராமதாஸ் மட்டுமே முடிவெடுப்பார். அதில் வெளிப்படைத்தன்மை இருக்கும். கடந்த தேர்தலின் போது அய்யாவுக்குத் தெரியாமல் நடத்திய விஷயங்கள் கட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்' உள்ளிட்ட நிபந்தனைகள் அய்யா தரப்பில் வைக்கப்பட்டன. இவைகளை வைத்து



அன்புமணியிடம் பேசியிருக்கிறார் குருமூர்த்தி. ஆனால், இவைகளுக்கு அன்புமணி ஒப்புக்கொள்ள வில்லை. அன்புமணி ஒப்புக்கொள்ளவில்லை என்ற செய்தியே ராமதாசை டென்ஷன்படுத்தியது.

மேலும், வருகிற தேர்தலில் அ.தி.மு.க.வுடன் ராமதாசும், பா.ஜ.க.வுடன் அன்புமணியும் கூட்டணி வைக்க விரும்புகின்றனர். அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் ஒரே கோட்டில் இருக்கும்போது, ராமதாஸ் -அன்புமணி இருவரின் கூட்டணி நிலைப்பாடும் ஒரே மாதிரித்தானே இருக்கிறது. இதில் என்ன சிக்கல்? என எல்லோருக்கும் தோன்றும்.

இதில்தான் சூட்சுமம் இருக்கிறது. அதாவது, அ.தி.மு.க.தான் கூட்டணிக்கு தலைமை. அதனால் அக்கட்சியுடன் பேசி பா.ம.க.வின் தேர்தல் கணக்கை நிலைநிறுத்திக்கொள்ள முடியும் என்பது ராமதாஸின் திட்டம். ‘அ.தி.மு.க. கூட்டணியில் எத்தனை கட்சிகள் இணைந்தாலும் இரண்டாவது இடம் பா.ம.க.வுக்கு இருக்க வேண்டும்; அதற்கேற்ப சீட் ஷேரிங் அவசியம். இதனை எடப்பாடியிடம் சொன்னால் போதும்; அவரே தோட்டத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்துவார்’ என கூட்டணி குறித்து சொல்லியுள்ளார் ராமதாஸ்.

ஆனால், அன்புமணியின் கணக்கு வேறாக இருக்கிறது. அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ஜ.க., சீட் ஷேரிங்கை பொறுத்தவரை, அ.தி.மு.க.வுக்கு 130 இடங்களும், மீதமுள்ள 104 இடங்களை பா.ஜ.க.வும் எடுத்துக்கொள்ளும் வகையில், அ.தி.மு.க.வுடன் பேசிக் கொண்டிருக்கிறார் அமித்ஷா. அதில் சக்சஸ் செய்திடுவார். இப்படி ஒரு திட்டம் அமித்ஷாவுடன் இருப்பதால்தான் 2026-ல் கூட்டணி ஆட்சி என்று சொல்லிவருகிறார்.

அப்படி, பா.ஜ.க.விடம் ஒப்படைக்கப்படும் இடங்களை பா.ஜ.க. கூட்டணி கட்சிகளுக்கும் பகிர்ந்துகொள்ளும். அந்த பகிர்தலை பா.ஜ.க. தலைமை செய்யும். இதுதான் அமித்ஷாவின் திட்டம். அமித்ஷாவின் இந்த திட்டத்தில் பா.ஜ.க.விடமிருந்து தேவையான இடங்களை நாம் பெற்றுக்கொள்ளலாம் என்பது அன்புமணி முன்வைக்கும் யோசனை. கூட்டணிக்குள் ஒரு கூட்டணி. இதையறிந்து ஏகத்துக்கும் டென்ஷனாகி விட்டார் ராமதாஸ்.

‘இதெல்லாம் எப்படி சாத்தியம்? கூட்டணின்னு நினைக்கிறாங்களா? கூட்டுப் பொறியல்னு நினைக்கிறாங்களா? நெவர்...’ என சொல்லிவிட்டார் ராமதாஸ். அவரைப் பொறுத்தவரை, அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பா.ம.க. இருக்கும். அந்த கூட்டணியில் பா.ஜ.க. இருக்கலாம். இதைத் தவிர்த்து, அ.தி.மு.க. கூட்டணியிலிருக்கும் பா.ஜ.க.வுடன் உள்கட்சி கூட்டணி என்பதெல்லாம் சரிப்பட்டு வராது என்பது ராமதாஸின் உறுதியான முடிவு.


அன்புமணி


வழக்கறிஞர் பாலு

இதனால்... ‘தூதுவர்களின் எந்த சமரசமும் இந்த சூழலில் ஏற்படவில்லை. இந்த கோபத்தில் தான் மீண்டும் தனது அதிரடிகளை கட்சிக்குள் தொடங்கிவிட்டார் அய்யா. கட்சியை காப்பாற்றவும், பாதுகாக்கவும் தனது வழிதான் சரி என்பதில் உறுதியாக இருக்கிறார். ஆனால், சமாதான முயற்சிகள் மட்டும் துண்டிக்கப்படாமல் தொடர்கதையாகி வருகிறது. எங்கு போய் முடியுமோ?’ என்று சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தது எதனால் என்பதை சுட்டிக் காட்டுகிறார்கள்.

இந்த சூழலில், தைலாபுரம் தோட்டத்துக்குத் திரும்பிய ராமதாஸ், பா.ம.க.வின் துணைத் தலைவராக முன்னாள் எம்.எல்.ஏ.வும் தனது நம்பிக்கைக்குரிய தளகர்த்தருமான ரவிராஜை நியமித்திருக்கிறார்.

கட்சிக்கு துணைத்தலைவரை நியமித்த கையோடு, பா.ம.க.வின் சமூகநீதி பேரவை தலைவர் வழக்கறிஞர் கே.பாலு உட்பட 35 மாவட்டச் செயலாளர்கள், 16 மாவட்ட தலைவர்கள் என கொத்தாக பலரையும் தூக்கி எறிந்துள்ளார் ராமதாஸ். கே.பாலுவுக்குப் பதிலாக வழக்கறிஞர் கோபு நியமிக்கப்பட்டிருக்கிறார். நீக்கப்பட்ட மாவட்டங்களுக்கு புதிய நிர்வாகிகளையும் உடனடியாக நியமித்துள்ளார் ராமதாஸ். இதுவரை மொத்தம் 46 மா.செ.க்களும், 25 மா.த.க்களும் பா.ம.க.வில் மாற்றப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கூட்டணிக்குள் கூட்டணி என்கிற கான்செப்ட்டை ராமதாஸ் ஒப்புக்கொள்ள வில்லைங்கிற தகவலை பா.ஜ.க.வின் மேலிடத்திற்கு

## ராமதாஸுக்கு பிறகு பேரன்! அன்புமணி தனிக்கட்சி?

அன்புமணி தனக்கடுத்ததாக நிச்சயம் பேரன்களுக்கு வாய்ப்பளிப்பார் என்று ராமதாஸ் நம்பியிருந்தார். ஆனால் அன்புமணியோ, தனது மாமனார் மற்றும் மனைவியின் பேச்சை கேட்டுக்கொண்டு பல காரியங்களை செய்ததாகவும், குறிப்பாக, கட்சியை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்று கணக்கு போட்டதாகவும் ராமதாஸுக்கு அன்புமணி மீது கோபமாம். தனது பேச்சை மதிக்காமல் சௌமியாவை எம்.பி. சீட்டுக்கு களமிறங்க வைத்ததிலும் பிரச்சனை எழுந்திருக்கிறது. அதேபோல, கட்சித் தலைவரான ஜி.கே.மணியின் மகன் தமிழ்குமரனை மாநில இளைஞரணித் தலைவராக அறிவித்தபோதும் அவரை அன்புமணி பொறுப்புக்கு வரவிடவில்லை. அதேபோல், முகுந்தனுக்கும் பொறுப்பை வழங்கவிடாமல் செய்திருக்கிறாராம் அன்புமணி. தனது மகள் சங்கமித்ராவுக்கு அந்த பொறுப்பை வழங்கவே வேறு யாரையும் அப்பதவியில் அமரவிடாதபடி தடுத்ததாக அன்புமணி மீது ராமதாஸுக்கு கோபம்.

இச்சூழலில், அடுத்து என்ன செய்வதென முடிவெடுப்பதற்காக பாலுவை அழைத்து ஆலோசித்திருக்கிறாராம் அன்புமணி. அதில், பொதுக்குழுவை கூட்டும்போது தீர்மானத்தை செல்லாது என வழக்கு தொடுக்கலாம். இல்லையென்றால் அமித்ஷா மூலம் மாம்பழம் சின்னத்தை நாம் கைப்பற்றலாம். இதெல்லாம் சாதகமாக அமையவில்லையென்றால், தனிக்கட்சி தொடங்கலாமென்று ஆலோசனை வழங்கினாராம் பாலு.

–சே

NKN140625

பாஸ் செய்திருக்கிறார் ஆடிட்டர் குருமூர்த்தி. அத்துடன், 'தைலாபுரம் தோட்டத்துக்கு நீங்கள் (அமித்ஷா) ஒரு விசிட் அடித்து, பெரியவர் ராமதாஸிடம் பேச்சுவார்த்தை நடத்தினால் அப்பா -மகன் மோதல்கள் முடிவுக்கு வரும்.

தமிழகத்தில் சீனியர் மோஸ்ட் லீடர் ராமதாஸ். பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த தலைவர். அவரை நீங்கள் சந்திப்பது அரசியலில் ஆரோக்கியமாகப் பார்க்கப்படும். அனைத்து பிரச்சனைகளும் சால்வாகும்' என அமித்ஷாவுக்கு ஆடிட்டர் வழியாக சொல்லப்பட்டிருக்கிறது.

இதுகுறித்து விசாரித்தபோது, குருமூர்த்தியின் யோசனையை அமித்ஷா ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பா.ம.க.வை கூட்டணிக்குள் கொண்டு வரவேண்டும் என்பதில் பா.ஜ.க. தீர்க்கமாக இருக்கும் நிலையில், தைலாபுரத்தில் அமித்ஷாவை விரைவில் எதிர்பார்க்கலாம். அமித்ஷாவின் பேச்சுவார்த்தையிலும்



ரவிராஜ்

உடன்பாடு ஏற்படாது போனால், அன்புமணி தலைமையில் பா.ம.க.வை உடைத்து, நாங்கள்தான் உண்மையான பா.ம.க. என்கிற சூழலை பா.ஜ.க. உருவாக்கும். தேர்தல் ஆணையமும் அதற்கேற்ப முடிவுகள் எடுக்கும். இது பா.ஜ.க.வின் கடைசிக் கட்ட ஆயுதம் என்கிறார்கள் உளவுத்துறையினர்.

இந்த நிலையில், வியாழக்கிழமை பத்திரிகையாளர்களை சந்தித்த ராமதாஸ், "பாட்டாளி கட்சியினரை என் சொந்தங்களாகப் பார்க்கிறேன். அவர்கள் என் தெய்வங்கள். குருமூர்த்தியும் சைதை துரைசாமியும் தனிப்பட்ட முறையில் சந்தித்தார்கள். பா.ஜ.க. சார்பிலோ, அமித்ஷா சார்பிலோ யாரும் என்னிடம் பேசவில்லை. கூட்டணியை நான்தான் முடிவு செய்வேன். பா.ம.க.வுடன் கூட்டணி வைக்க விரும்புபவர்களுடன் என்ன பேசவேண்டும்னு எனக்குத் தெரியும். பா.ம.க.வில் அரசியல் வாரிசு யாரும் இல்லை. கட்சித் தொண்டர்கள் என் பக்கம்தான். பா.ம.க. சாதி கட்சி கிடையாது. அனைவருக்குமான கட்சி. ஒவ்வொரு செங்கல், செங்கலாக நான் கட்டிய மாளிகையிலிருந்து என்னை வெளியே தள்ளுகிறார்கள். அமைதியாக இருந்திருந்தால், ஓரிரு வருடங்களில் நானே முடிசூட்டும் விழா நடத்தியிருப்பேன். ஆனால், என்னை குலசாமி என கூறிக்கொண்டே நெஞ்சில் குத்துகின்றனர்" என்று 'நீயா? நானா? பார்த்துவிடலாம்' என்கிற ரீதியில் கொந்தளித்துள்ளார் ராமதாஸ்.

–இரா.இளையசெல்வன்

## பாரம்பரியமிக்க சித்த மருத்துவ சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300 E-mail : sales@sivarajsiddha.com

7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

### தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை


Dr.சிவராஜ் சிவகுமார்

**சென்னை கிளை**
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

**ஈரோடு கிளை**
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில், கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

**ஒசூர் கிளை**
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம் அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

**திருப்பத்தூர் கிளை**
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500


Dr.சிவராஜ் சிபி

### ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

| | | | | |
|---|---|---|---|---|
| **திருச்சி**<br>1ம், 9ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் அபிராமி<br>சென்ட்ரல் பஸ்நிலையம், பெரியார் சிலை அருகில். | **திருப்பூர்**<br>1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை<br>14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை<br>SAP ரெஸிடென்ஸி<br>111, முனிசிபல் ஆபீஸ் ரோடு. | **தஞ்சை**<br>2ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>ஹோட்டல் காசி இன்<br>1493, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம். | **கும்பகோணம்**<br>2ம் தேதி<br>மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் திருமால்<br>ஜான்செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில். | **நாகர்கோவில்**<br>2ம் தேதி,<br>காலை 6 முதல் மாலை 5 வரை,<br>ஹோட்டல் கங்கா பேலஸ்<br>K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன். |
| **நெல்லை**<br>3ம், 23ம் தேதியும்,<br>காலை 6 முதல் மாலை 5 வரை,<br>பரணி லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு. | **விழுப்புரம்**<br>3ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஆதித்யா<br>தேர் விநாயகர் கோவில் & புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர். | **காஞ்சிபுரம்**<br>4ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>வசந்த் வில்லா<br>T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை & பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில். | **மதுரை**<br>4ம், 22ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>காலேஜ் ஹவுஸ்<br>டவுன் ஹால் ரோடு. | **கள்ளக்குறிச்சி**<br>4ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>AKT லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில். |

| | | | |
|---|---|---|---|
| **தேனி**<br>7ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்<br>பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு. | **திண்டுக்கல்**<br>8ம், 24ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஐஸ்வர்யா<br>ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில். | **திருவண்ணாமலை**<br>9ம், 22ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி. | **வேலூர்**<br>11ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்<br>3, தென்னைமரம் தெரு. |

| | | | | |
|---|---|---|---|---|
| **கடலூர்**<br>11ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>ஹோட்டல் CAR லாட்ஜ்<br>62, லாரன்ஸ் ரோடு. | **சிதம்பரம்**<br>11ம் தேதி<br>மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஜெயராம்<br>35, 36, SP கோயில் தெரு. | **மாயவரம்**<br>12ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>அல்-முஜம்மில் லாட்ஜ்<br>பழைய பஸ்நிலையம் அருகில். | **நாகப்பட்டினம்**<br>12ம் தேதி<br>மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>நியூ குமார் லாட்ஜ்<br>புதிய பஸ் நிலையம் அருகில். | **மன்னார்குடி**<br>13ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>ஹோட்டல் காவேரி லாட்ஜ்<br>புதிய பஸ் நிலையம் அருகில். |

| | | | |
|---|---|---|---|
| **புதுக்கோட்டை**<br>13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ராயல் பார்க்<br>புதிய பஸ்நிலையம் எதிரில். | **கோவை**<br>13ம், 26ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>OYO ROOMS (கோடா ஓட்டல்)<br>294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில். | **கரூர்**<br>14ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஆர்த்தி ஹோட்டல்<br>தின்னப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில். | **புதுவை**<br>16ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி<br>பஸ் நிலையம் எதிரில். |
| **தென்காசி**<br>18ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்<br>2, பழைய பஸ் நிலையம் ரோடு. | **கிருஷ்ணகிரி**<br>20ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்<br>239, பெங்களூர் ரோடு. | **ஆரணி**<br>21ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில். | **ராம்நாடு**<br>24ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5வரை<br>ஹராஜா பேலஸ்<br>துரைராஜ் சத்திரம் வீதி. |

| | | |
|---|---|---|
| **சிவகாசி**<br>25ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>மணீஸ் லாட்ஜ்<br>பஸ் நிலையம் பின்புறம். | **பொள்ளாச்சி**<br>27ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>சக்தி ஹோட்டல்<br>144, கோவை ரோடு. | **மேட்டுப்பாளையம்**<br>28ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் காவேரி<br>K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு. |

சிவராஜ் சித்த மருந்துகளை www.sivarajsiddha.com ஆன்லைன் மூலம் மருந்து பெறலாம். Paytm 98427 22500



7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

Advt

# தேர்தலில் த

# ராகுல், கமலா ஹா

மகாராஷ்டிர தேர்தல் நடந்து முடிந்ததிலிருந்தே தேர்தலில் சில மேட்ச் பிக்ஸிங் நடந்திருப்பதாக குற்றம் சாட்டிவரும் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி, சமீபத்தில் மீண்டும் ஒருமுறை அழுத்தமாகக் குற்றம் சாட்டியதோடு எப்படியெல்லாம் தேர்தல் நடைமுறையில் ஆளும்கட்சி செல் வாக்கு செலுத்தியது என்பதை விவரித்திருந்தார். தற்போது அமெரிக்காவில் 2024-ல் நடந்த தேர்தலிலும், வாக்கு எண்ணிக்கையிலும் எந்திரத்திலும் ஊழல் நடைபெற்றிருப்பதாக கமலா ஹாரிஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

முதலில் ராகுலின் குற்றச்சாட்டுகளைப் பார்ப்போம். தேர்தல் கமிஷனரை நியமிப்பதற்கான சட்டத்தைத் திருத்தியது பா.ஜ.க. முன்பு இந்த தேர்வுக் குழுவில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்றிருந்ததை, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு அந்த இடத்தில் ஒரு கேபினட் அமைச்சர் என திருத்தம் செய்தது. இம்முறை பிரதமர், உள்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் என்று மாற்றியது. மூன்றில் இருவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாகிவிட எதிர்க்கட்சித் தலைவரின் ஆட்சேபனைகள் பொருளற்றதாகி விடுகின்றன.

இரண்டாவதாக, வாக்காளர் பட்டியலை போலி வாக்காளர்களால் நிறைத்தல். 2019 நாடாளுமன்றத் தேர்தலின் போது மகாராஷ்டிர வாக்காளர் எண்ணிக்கை 8.98 கோடி. ஐந்து வருட இடைவெளியில் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இது 9.29 கோடியானது. ஐந்து வருட இடைவெளியில் 31 லட்சம் வாக்காளர்களே அதிகரித்திருந்தனர். ஆனால் அடுத்த ஐந்து மாதங்களில் மட்டும் 41 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆக, சட்டமன்றத் தேர்தலுக்கு முன் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 9.70 கோடி. மகாராஷ்டிர அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கணக்கின்படி அம்மாநிலத்திலுள்ள வயதுவந்தோரின் எண்ணிக்கை 9.54 கோடி. மிச்சமுள்ள 16 லட்சம் பேர் எங்கிருந்து வந்தனர்?

மேலும், இந்த சட்டமன்றத் தேர்தலில் மாலை 5 மணிக்கு மேல் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. கிட்டத்தட்ட 76 லட்சம் வாக்காளர்கள் 5 மணிக்குமேல் வாக்களித்திருக்கிறார்கள். முந்தைய தேர்தல்களில் எல்லாம் இதுபோல் நடைபெறவில்லை. கடந்த லோக் சபா தேர்தலில் பா.ஜ.க. மோசமாக வாக்குகள் வாங்கிய 85 தொகுதிகளைச் சேர்ந்த 12,000 பூத்துகளில்தான் 5 மணிக்கு மேலான வாக்கு சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. அதாவது இந்த பூத்துகளில் 5 மணிக்கு மேல் சராசரியாக ஒரு பூத்தில் 600 பேர் வாக்களித்திருக்கின்றனர். ஒருவர் வாக்களிக்க 1 நிமிடம் என்றாலும்கூட, இங்கெல்லாம் கூடுதலாக 10 மணி நேரம் தேவை. ஆனால் இந்த 11,000 பூத்துகளில் எங்கேயுமே கூடுதலாக 10 மணி நேரம் வாக்குப்பதிவு நடைபெறவில்லை என தர்க்கங்களுடன் கேள்வியை எழுப்பியுள்ளார். இதுகுறித்து தேர்தல்





ராகுல்

NKH140625

# ...தில்லுமுல்லு! ...ாரிஸ் குற்றச்சாட்டு!

ஆணையம் முழுமையான, தர்க்கப்பூர்வமான பதில் எதுவும் தரவில்லை. இதனைச் சரிசெய்யாமல், தேர்தல் நடத்தினால் மகாராஷ்டிராவில் நடந்ததே பீகாரிலும் நடக்கும் எனவும் விமர்சனம் வைத்திருக்கிறார் ராகுல்.

ராக்லேண்ட் கவுண்டியின் 2024 தேர்தல் முடிவுகளில் துல்லியம் இல்லையெனத் தொடரப்பட்ட வழக்கை விசாரிக்க நியூயார்க் உச்சநீதிமன்ற நீதிபதி அனுமதியளித்துள்ளார். ஸ்மார்ட் லெஜிஸ்லேஷன் என்ற தேர்தல் தொடர்பான அமைப்பு தாக்கல்செய்த இந்த வழக்கு, ஜனாதிபதி மற்றும் அமெரிக்க செனட் வாக்கு எண்ணிக்கைகள் இரண்டும், கடுமையான முறைகேடுகளைக் காட்டுகின்றன என்று குற்றம்சாட்டுகிறது.

“இந்த ஒரு வழக்கில் கிட்டத்தட்ட 50% வாக்குகள் மாறியுள்ளன” என்று ஸ்மார்ட் லெஜிஸ்லேஷன் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநரான லுலு ஃப்ரைஸ்டாட் கூறுகிறார். “செனட் முடிவுகள் தவறானவை என்பதற்கான தெளிவான சான்றுகள் உள்ளன, மேலும் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தவறாக இருந்தால், அது 2024 ராக்லேண்ட் கவுண்டி பொதுத் தேர்தலில் வாக்களித்த ஒவ்வொரு நபரின் அரசியலமைப்பு உரிமைகளையும் மீறுவதாகும்” என அவர் வாதிட்டார்.




தேர்தல் முறைகேடுகள் வேறு இடங்களிலும் பதிவாகியிருந்தாலும், ராக்லேண்ட் மாவட்டமே நீதிமன்றத்தில் முறையாக வழக்குத் தொடுத்த முதல் மாவட்டமாகும். நெவாடாவின் கிளார்க் கவுண்டி, பென்சில்வேனியாவின் சில பகுதிகளிலும் இதேபோன்ற பிரச்சினைகள் எழுந்தன. அங்கு வெடிகுண்டு மிரட்டல்கள் மற்றும் இயந்திரச் செயலிழப்புகள் வாக்களிப்பைச் சீர்குலைத்தன.

இதேபோல அமெரிக்கத் தேர்தல்களில் பயன்படுத்தப்பட்ட வாக்கு எந்திரங்களில் 40 சதவிகிதத்துக்கும் மேலான வாக்குப்பதிவு எந்திரங்களில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. இயந்திரங்களைப் பரிசோதனை செய்து சான்றளிக்க ஒரு தனியார் நிறுவனம் நியமிக்கப்பட்டது. புரோ வி.வி. நிறுவனம் தேர்தல் மென்பொருள் உள்ளிட்ட அனைத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. வாக்குகள் காணாமல் போனது என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கமலா ஹாரிஸ் மற்றும் பிற வேட்பாளர்களுக்கான வாக்குகள், வாக்குப்பதிவு இயந்திரங்களால் சரியாக எண்ணப்படவில்லை. 2024 தேர்தலில் பதிவான வாக்குகளை முழுமையாக மறுஎண்ணிக்கை செய்யவேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. அடுத்த விசாரணையை செப்டம்பர் 22, 2025 அன்று நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது. அப்போது வாக்கு எண்ணிக்கையில் உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றி மேலும் தெரியவரலாம்.

இந்தியாவைத் தொடர்ந்து, அமெரிக்காவிலும் தேர்தல் தில்லுமுல்லு குற்றச்சாட்டு எழுந்துள்ளது... உலக அளவில் அதிர்ச்சி அலைகளை எழுப்பியுள்ளது.

**-க.சுப்பிரமணியன்**



கமலா ஹாரிஸ்

NKN140625

**வாசுதேவன், பெங்களூரு**


**உலகின் உயரமான செனாப் பாலம்..?**

*2004-ல் மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்திலேயே தொடங்கப்பட்ட பாலப் பணி. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இதன் 70 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. காங்கிரஸ் ஆட்சியில் தொடங்கப்பட்டாலும், திறந்துவைத்து தேசியக் கொடியை ஆட்டி பேரைத் தட்டிச் சென்றுவிட்டார் மோடி. 1178 அடி உயரமான இந்தப் பாலம் ஜம்மு- காஷ்மீர் பள்ளத்தாக்கை இந்தியாவின் பிற பகுதிகளுடன் இணைக்கிறது. செனாப் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. ஆந்திராவைச் சேர்ந்த மாதவி லதா, இந்தப் பாலத்தின் உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தார். உலக அதிசயமாகக் கருதப்படும் ஈபிள் கோபுரத்தைவிட 35 மீட்டர் உயரமானது. இந்த இரும்புப் பாலம் ஒரு பொறியியல் சவால். அதைச் சாதித்த மாதவி லதாவுக்கு வாழ்த்துகள்!*

**நடேஷ்கன்னா, கல்லிடைக்குறிச்சி.**

**விஜய் மல்லையா புதிய குண்டைத் தூக்கிப் போட்டிருப்பது பற்றி?**

*விஜய் மல்லையா விவகாரம் பெரியது. 6,000 கோடிதான் வாங்கினேன். என் சொத்தை விற்று 14,000 கோடியை வங்கிகள் எடுத்துக்கொண்டு விட்டன. இருந்தும் என்னைத் திருடன் என்கிறார்கள் எனச் சொல்கிறார். மல்லையா சொத்தை விற்று*




பொறியாளர் மாதவி லதா

மாவலி பதில்கள்

வங்கிகள் எடுத்துக்கொண்டது 11,000 கோடி. வாங்கிய கடன், அதற்கு வட்டி எல்லாம் சேர்த்து இன்னும் 7,000 கோடி பாக்கியிருப்பதாக கடன்வாங்கிய வங்கிகள் சொல்கின்றன. நாட்டைவிட்டுப் போகும்போது அருண் ஜேட்லியிடம் சொல்லிவிட்டுத்தான் போனேன் என்கிறார். அதை அப்போதே ஜேட்லி மறுத்து விட்டார். கிங்ஃபிஷர் விமான நிறுவனத்துக்காக வாங்கிய கடன் பணத்தில் பார்முலா 1 பந்தய அணி வைத்திருந்தது, இங்கிலாந்தில் மாளிகை கட்டிக்கொண்டது என பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. பா.ஜ.க. தயவால்தான் எம்.பி.யானார். இப்போது பா.ஜ.க.வை நோக்கியே விரலை நீட்டுகிறார். மல்லையா ஒன்றும் யோக்கியர் இல்லை.

**மு.முஹம்மது ரபீக் ரஷாதீ, விழுப்புரம்**

**தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டு தமிழ் மொழியில் பேசமுடியவில்லையே என்பதை நினைத்து வருந்துகிறேன் என்று கூறுகிறாரே அமித்ஷா...?**

எல்லாம் அரசியல்வாதிகள் கொடுக்கும் அல்வாதான். மோடி திருக்குறளைப் போட்டு புரட்டியெடுப்பதில்லையா! இவர் அத்தனை ரிஸ்க் எடுக்காமல் சென்டிமெண்டாக அடிக்கிறார். பிடித்திருந்தால் அல்வாவைச் சுவையுங்கள். இல்லையென்றால் எனக்கு சர்க்கரை வியாதி, வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள்.

**அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.**

**பிரதமர் மோடிதான் உண்மையான சமூக நீதித் தலைவர் என்று மத்திய மந்திரி எல்.முருகன் கூறியது பற்றி?**

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற நிறுவனங்களில் மோடியின் ஆட்சிக்காலத்தில்தான் தலித், பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடுகள் முழுமையாக நிரப்பப்படாமல் உள்ளன. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் என்ற பெயரில் முற்பட்ட வகுப்பினருக்கு 10% இடஒதுக்கீடு அளித்ததும் இந்த ஆட்சிக் காலத்தில்தான். பல வேலைவாய்ப்புகள், கல்லூரி இடங்களுக்கு தலித், பிற்பட்டோருக்கான கட் ஆப் மார்க், இந்த EWS எனும் முற்பட்ட வகுப்பினருக்கான கட்ஆப் மார்க்கைவிட அதிகமாக இருக்கும் கேலிக்கூத்தும் நடக்கிறது. ஒப்பந்த அடிப்படையிலான வேலை அமர்த்துதலில் இட ஒதுக்கீட்டைப் புறக்கணித்துள்ளனர் பா.ஜ.க.வினர். ஒருவேளை எல்.முருகனுக்கு இதுதான் சமூக நீதிபோல!

**மாயூரம் இளங்கோ, மயிலாடுதுறை**

**'அரெஸ்ட் கோலி' என்ற ஹேஷ்டேக் எக்ஸ் தளத்தில் டிரெண்டானது குறித்து?**


18 வருட கனவுக்குப் பின் கிடைத்த கோப்பையின் மகிழ்ச்சி, பொதுமக்கள் பலியான நிகழ்வால் கோலிக்குக் கசந்துபோயிருக்கும். தவிரவும், எத்தனை பிரபலமான விளையாட்டு வீரராக இருந்தாலும் அவரையும் பிடிக்காதவர்கள் இந்த சமூகத்தில் இருப்பார்கள். தங்களுக்குச் சிக்கல் என்றும் வரும்போது, அதனை பிறர்பக்கம் திருப்பிவிடுவதில் அரசியல்வாதிகள் கில்லிகள் என்பதை இந்த நிகழ்வுமூலம் கோலி பாடம் கற்றுக்கொண்டிருப்பார்.

**எஸ். கதிரேசன், பேர்ணாம்பட்டு**

**வைகோவுக்கு மீண்டும் மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்காதது வருத்தமளிக்கிறது என்றிருக்கிறாரே துரை.வைகோ?**

மகன் அல்லவா... வலிக்கத்தான் செய்யும். நாடாளுமன்றத்துக்கும், தமிழகத்துக்கும்கூட வைகோ போன்ற வீச்சும் வேகமும் மிக்க பேச்சாளர்கள் செல்லாதது இழப்புதான். சில நேரங்களில் சில விஷயங்கள் தவிர்க்க முடியாதவை.

●



NKN140625

www.nakkheeran.in



பிரியா நடத்திய பயிற்சிக் கூட்டம்



பிரியா

ஃபாலோ-அப்!

# மீண்டும் சர்ச்சையில் சிக்கிய சுரங்கத்துறை அதிகாரி!

-தஞ்சை சலசலப்பு!

**2025**, ஜூன் 7-10 நக்கீரன் இதழில் தஞ்சாவூர் சுரங்கத்துறை அதிகாரி ஏ.டி. பிரியா குறித்தும், அவர் வழங்கிய கிராவல் பர்மிட் குறித்தும், ‘சுரங்கத்துறை ஊழல்! சுதாரிக்குமா அரசு?’ என நாம் செய்தி வெளியிட்டிருந்தோம். அந்த செய்திக்குப் பிறகு இந்த துறையைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான சரவணவேல்ராஜ் உடனடியாக நடடிக்கை எடுத்துள்ளார். எனவே அவருக்கு நக்கீரன் இதழ் சார்பாக பாராட்டு.

தஞ்சாவூரில் கிராவல் மண் எடுப்பதற்கான சட்டதிட்டங்கள், எப்படி கிராவல் மண் எடுக்கவேண்டும் என்பது குறித்து விண்ணப்பித்திருந்த அனைத்து ஒப்பந்ததாரர்களையும் அழைத்து அவர்களுக்கு ஒரு பயிற்சி அளிக்க உத்தரவிட்டார் சரவணவேல்ராஜ். ஆனால் ஏ.டி. பிரியா அவருக்கு வேண்டப்பட்ட 3 நபர்களை மட்டும் பயிற்சிக்கு அழைத்துவிட்டு, லாரி ஓட்டுநர்கள், பணியாளர்கள் என போலியான ஆட்களை வைத்து பயிற்சி வழங்கியதாகக் கூறி போட்டோ எடுத்து அதிகாரிக்கு அனுப்பிவிட்டு அதிகாரியை ஏமாற்றியுள்ளார்.

சென்னையிலிருந்து ஆடிட் செய்ய வந்த அதிகாரிகள் ஒட்டுமொத்த ஆவணங்களை எடுத்துச்சென்று ஆய்வு செய்துவரும் நிலையில், பல புதிய பிரச்சனைகளையும் ஏ.டி.பிரியா உருவாக்கிவருகிறார்.

இந்த விவகாரத்தை திசைதிருப்பத் திட்டமிட்ட பிரியா, தஞ்சாவூர் ஏ.டி.யாக பணியாற்றிய சீனிவாசராவ் என்பவர், தன்னுடைய அலுவலகத்திற்கு தன் உடைமைகளை எடுக்கவந்துள்ளார். அவர் வந்த சி.சி.டி.வி. வீடியோவை எடுத்து ஒரு தனிநபரிடம் கொடுத்து, சீனிவாசராவ் செய்த ஊழல்களை மறைப்பதற்காக அது தொடர்பான ஆவணங்களை அலுவலகத்திற்கு வந்து எடுத்துச் செல்வதாகக் கூறி செய்தியாக வெளியிடுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஒரு தனிநபருக்கு பிரியா லீஸ் கொடுத்த

www.nakkheeran.in



விவகாரம் மேலிடத்திற்குத் தெரியவந்ததால், அதை திசைதிருப்ப இப்படி ஒரு வேலையைச் செய்துள்ளார். இவர் கொடுத்த ஒப்பந்தம், வருகின்ற 27.06.2025 வரை செல்லும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் எடுக்க அனுமதி கொடுக்கப்பட்ட நிலையில், தஞ்சாவூர் முழுவதும் கிராவல் எடுக்கும் பணி நடைபெற்றுவருகிறது. மாவட்டம் முழுவதும் கிராவல் எடுப்பதற்கான லைசன்ஸ் கொடுக்கப்படவில்லை என்றாலும், ராஜ்குமார் குழுவைச் சேர்ந்த தினேஷ் உள்ளிட்டவர்கள் ஒரு பர்மிட்டை உச்சபட்சமாக 5ஆயிரம் வரை விற்பனை செய்வதோடு, போலியான பர்மிட்டுகளும் போட்டு விற்பனை செய்துள்ளதால், தஞ்சாவூர் முழுவதும் கிராவல் மண் அள்ளிவருகின்றனர். ஏ.டி. பிரியாவின் நம்பிக்கைக்குரிய ஆளான சிவதாஸ் என்பவரை கையில் வைத்துக்கொண்டு தினேஷ் யாருக்கும் பயப்படாமல் துணிந்து செயல்பட்டுவருகிறார்.

இந்த சுரங்கத்துறை அலுவலகத்தில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக ஒப்பந்தப் பணியாளராக பணியாற்றி வரும் பெண் ஊழியர் கலை. அலுவலகத்திற்கு வரும் அதிகாரிகள், ஒப்பந்ததாரர்களை கையில் வைத்துக்கொண்டு, வரும் அதிகாரி சாதகமான ஆளாக இருந்தால், ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணம் வாங்கிக்கொடுப்பது, ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களில் கையெழுத்து வாங்குவது என்று அதிகாரம் காட்டிவருகிறார். அதேசமயம், அதிகாரி இவருக்கு சாதகமாக இல்லை என்றால், அதிகாரியைக் குறித்து தவறான தகவல்களை வெளியே கொடுத்து, அவர் குறித்து செய்தி வெளியிடுவது, ஒப்பந்ததாரர்கள் மூலம் உயரதிகாரிகளுக்கு மொட்டைக் கடிதம் போடுவது என்று செயல்படுவதாக இவர்மேல் புகார்கள் குவிகின்றன.

பொதுவாக ஒரு துறையில் பணியாற்றும் ஒப்பந்தப் பணியாளர்களை 3 வருடத்திற்கு ஒருமுறை பணியிடமாற்றம் செய்வார்கள். ஆனால் இவர் தொடர்ந்து 10 வருடத்திற்கும் மேலாக ஒரே இடத்தில் பணியாற்றி வருகிறார். எனவே இவரைப் பணியிடமாற்றம்



ராஜ்குமார்



கலை



சிவதாஸ்

செய்தால் பாதிப் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று கூறுகிறார்கள்.

அதேபோல் திருச்சியைச் சேர்ந்த தி.மு.க. பிரமுகர் டி.எஸ்.பி. என்கிற சீனிவாசப்பெருமாள் சிறுகனூர் பகுதியிலுள்ள இன்ஜினியரிங் கல்லூரியின் பின்புறம் அமைச்சர் ஒருவரின் பெயரைச் சொல்லி கிராவல்மண் அள்ளி வருகிறார். இப்படி டெல்டா பகுதி முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் சட்டவிரோதமாக கிராவல்மண் தொடர்ந்து அள்ளப்பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் பல கோடிகளில் பணம் புரளுவதால், அதிகாரிகள் போட்டி போட்டுக்கொண்டு பணம் சம்பாதிப்பதோடு, தனக்கு வேண்டிய ஒப்பந்ததாரர்களுக்கு ஒரு பங்கும், தன்னுடைய துறைசார்ந்த ஊழியர்கள், அதிகாரிகள் என்று யார் அவர்களுக்கு சாதகமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு பங்கும் கொடுத்து அவர்கள் வாயை அடைத்துவிடுகின்றனர்.

இத்தகைய ஒரு அதிகாரி மேல் நடவடிக்கை எடுத்தும், அவருக்குக் கீழிருக்கும் அதிகாரிகள் பயமில்லாமல் துணிந்து செயல்படுகிறார்கள். பிரியா போன்ற அதிகாரிகள், ஒப்பந்த ஊழியர்கள் அனைவரும் களையெடுக்கப்பட வேண்டும். கிராவல் மண் அள்ளுவதற்கான நடைமுறையை அரசு முறைப் படுத்திட வேண்டும். அதிகார துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை பொது மக்களிடம் எழுந்துள்ளது.

-மகேஷ்

NKN140625



ஸ்டெபி
சடலமாக

# இளம்பெண் மர்ம மரணம்! அலட்சியத்தில் தாம்பரம் காவல்துறை!

சென்னை தாம்பரத்தை அடுத்த வரதராஜ புரம் அஷ்டலட்சுமி நகரைச் சேர்ந்த ஏனோஸ் நிக்கோதம்- சுனிதாதேவி தம்பதிக்கு டார்வின் என்ற மகனும், ஸ்டெபி என்ற மகளும் உள்ளனர்.

இவர்கள் வீட்டில் குடியேறிய அரசனூரைச் சேர்ந்த ராஜ்மோகன், ஸ்டெபியை காதல் வலையில் வீழ்த்தினார். ஸ்டெபியின் தாயார் சுனிதாதேவியிடம் ராஜ்மோகன் பெண் கேட்க, அதற்கு அவரோ “நாங்கள் பட்டியல் சமூகத்தை சேர்ந்த கிறிஸ்தவ குடும்பம், நீங்களோ மாற்றுச் சமூகத்தை சேர்ந்த இந்துக் குடும்பம். ஒத்துப்போகாது” என்று மறுத்திருக்கிறார். ஸ்டெபியின் வற்புறுத்தலால், இரு வீட்டார் சம்மதத்துடன் கடந்த 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் தேதி திருமணம் நடந்தது.

ஒரு பெண் குழந்தை பிறந்த நிலையில் கடந்த மே மாதம் 3-ஆம் தேதி அதிகாலை ஸ்டெபி மர்மமான முறையில் இறந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக ஸ்டெபியின் அண்ணன் டார்வின் நம்மிடம், “தங்கை ஸ்டெபி காதல் விவகாரம் தெரிந்ததும், ராஜ்மோகன் பற்றி அவனுடைய சொந்த ஊரில் விசாரித்தோம். அவனைப் பற்றி தவறாகத்தான் தகவல் கிடைத்தது. தங்கையின் வற்புறுத்தலாலே திருமணத்திற்கு சம்மதித்தோம்.

40 சவரன் தங்க நகையும், ராஜ்மோகனுக்கு 5 சவரன் தங்க நகையும், பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் செலவுசெய்து பைக், வீட்டு உபயோகப் பொருட்களும் வாங்கிக் கொடுத்தோம்.போதாதென்று ராஜ்மோகன் குடும்பத்தினர் ப்ரீ-வெட்டிங் போட்டோ ஷூட்டுக்கு ரூ.2.5லட்சம், திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு ரூ.5 லட்சம் என வரதட்சணையாக கேட்டு வாங்கினார்கள்.

இதே ஏரியாவுல வாடகை வீட்டுல தங்கவெச்சோம். என் தங்கை தங்க நகைய சிட்டி யூனியன் பேங்க்ல அடமானம் வைச்சிட்டான். 10

(தொடர்ச்சி 33-ம் பக்கம்)





ராஜ்மோகன்
-ஸ்டெபி
திருமணத்தின்போது


www.nakkheeran.in


# நக்கீரன்
## குழுமத்தின் வெளியீடுகள்!





















105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14 **போன் : 044 2688 1800**


நூல்களை ஆன்லைன் மூலம் பெற **books.nakkheeran.in**

Advt

# அமைச்



அமைச்சர் நேருவுடன் -மாத்தூர் கருப்பையா



2616/2024

भारतीय गैर न्यायिक INDIA NON JUDICIAL

रु.5000 पाँच हजार रुपये

Rs.5000 FIVE THOUSAND RUPEES

INDIA

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU 26 APR 2024 AB 234691

திரு.A. கருப்பையா
திரு.P. காந்தி @ அழகப்பன்
திருச்சி.

S.GOVINDARAJ S.V
No.46, HEBER ROAD,
CANTONMENT, TRICHY 1
L.No.04/2021/TRY
Ph: 94435-44733

கிரைய ஆவணம்

2024ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 27-ம் தேதி

திருச்சிராப்பள்ளி-620 009, மாத்தூர், சன்னாசிபட்டி, மேலத்தெரு, கதவு நெ.3/56 என்ற முகவரியில் வசித்து வரும் தெய்வத்திரு. அய்யாக்கண்ணு அவர்களின் குமாரர் திரு.A.கருப்பையா [Aadhar No.6294-5620-6947] [PAN: ALTPK3745J]-[1],

திருச்சிராப்பள்ளி-620 009, ஸ்ரீரங்கம் தாலுகா, புலாங்குளத்துப்பட்டி அஞ்சல், அம்மாபேட்டை, காளியம்மன் கோவில் தெரு, கதவு நெ.1/157 என்ற முகவரியில் வசித்து வரும் தெய்வத்திரு.M.K.A.பிச்சை உடையார் அவர்களின் குமாரர் திரு.P.காந்தி @ அழகப்பன் [Aadhar No.8360-7584-7019] [PAN: BCSPA3746E]-[2], [கிரையம் வாங்குபவர்கள்] ஆகிய தங்கள் இருவருக்கும், கிரையம் கொடுப்பவர்

கிரையம் வாங்குபவர்கள்

மாத்தூர் கருப்பையா பெயரில் பத்திரப் பதிவு ஆவணம்

**தி**ருச்சி தி.மு.க.வில் அதிக சொத்து சேர்த்துள்ள தி.மு.க. முக்கிய நிர்வாகி குறித்து நாம் ஏற்கெனவே செய்தி வெளியிட்டிருந்தோம். அந்த மாத்தூர் கருப்பையா, ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் மறைவுக்கு பிறகு, எப்படி அவருடைய மனைவியிடம் பல கோடி மதிப்பிலான சொத்துக்களை எழுதி வாங்கியது மட்டுமின்றி, ரொக்கமாக 30 கோடி பணத்தை வாங்கிச் சென்றாரோ, அதேபோல் இன்னொரு விஷயமும் செய்திருக்கிறார்.

கடந்த 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம், அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரர் மறைந்த கே.என்.ராமஜெயம் திருச்சி தில்லைநகர் பகுதியிலுள்ள Training & Rehabilitation of Underprivileged Members of society, Trichy என்ற மையத்தை நடத்திவரும் மருத்துவர் ராமகிருஷ்ணன் என்பவருக்கு பத்திரப் பதிவு எண் 5835/ 2007 என்ற ஆவணத்தின்படி, சர்வே எண் 418/3ன் படி, 1.49 ஏக்கரும், 418/4 ன்படி 2.30 ஏக்கரும் என மொத்தம் 3.79 ஏக்கர் நிலத்தை சொசைட்டிக்கு முழுவதுமாக தான சாசனப் பத்திரமாக எழுதிக் கொடுத்துள்ளார்.

இப்படி ஒரு சொத்து எழுதிக் கொடுக்கப்பட்டிருப்பதை அறிந்த மாத்தூர் கருப்பையா, மருத்துவரை அணுகி முதலில் கேட்டுள்ளார். அதன்பின் அவரை மிரட்டி அந்த சொத்தை முதலில் தனக்கு தெரிந்த நபர்களின் பெயர்களுக்கு மாற்றி எழுதியவர், பின்னர் அந்த சொத்தை கடந்த 2024, ஏப்ரல் மாதம் எழுதி வாங்கி பத்திரம் செய்துள்ளார். அதில் மாத்தூர் கருப்பையா என்ற இவருடைய பெயருக்கும், ஸ்ரீரங்கம் அம்மாபேட்டை ஊராட்சிமன்றத் தலைவரான காந்தி என்கிற அழகப்பன் என்பவரின் பெயருக்கும் எழுதி வாங்கியுள்ளார். அதில் அவர்களிடமிருந்து சொத்துப் பதிவு செய்யப்பட்ட நாளில் 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், அதன்பின் காசோலையாக 5 லட்சமும் சொசைட்டியின் வங்கிக் கணக்கிற்கு சென்றுள்ளது.

# ...ருக்கே அல்வா!

## –திருச்சி தி.மு.க. நிர்வாகியின் தில்லாலங்கடி!

அந்த இடத்தை மிகக்குறைந்த விலைக்கு மிரட்டி வாங்கிய விவகாரம் அமைச்சர் நேருவிற்கு கடந்த 10 நாட்களுக்கு முன்புதான் தெரிய வந்திருக்கிறது. அவர் கருப்பையாவை நேரில் அழைத்து வசைபாடியிருக்கிறார். ஆனாலும் அவர்மீது பெரிதாக நடவடிக்கை இல்லையென்று கட்சிக்காரர்களே புலம்பித் தீர்க்கின்றனர்.

இந்த விவகாரம் குறித்து மாத்தூர் கருப்பையாவிடம் பேசியபோது, ''மருத்துவர் ராமகிருஷ்ணனுக்கு பணப்பிரச்சனை இருந்தது. எனவே அந்த நிலத்தை அவரே எழுதிக் கொடுத்தார். இந்த சொத்தை எழுதி வாங்கிய விவகாரம் அமைச்சருக்கு தெரியும். என்மீதான காழ்ப்புணர்ச்சியில் கட்சியினர் தவறான தகவல்களைத் தருகிறார்கள்'' என்றவரிடம், “சாமியாபிள்ளைபட்டியில் 9 முதல் 12 ஏக்கரை அதன் உரிமையாளரை மிரட்டி வாங்கியதாகக் கூறப்படுகிறதே?‘‘ என்றவுடன், ''நான் பணம் கொடுத்து 7 ஏக்கர் வாங்கியுள்ளேன். சந்தேக மிருந்தால் அமைச்சர் நேருவிடம் கேட்டுக் கொள்ளுங்கள்'' என்றார். கட்சிக்காரர்களை மட்டுமே ஏமாற்றி சொத்துக்களை எழுதி வாங்குவதாக எழும் குற்றச்சாட்டு குறித்து அவர் பதிலளிக்கவில்லை.

அதேபோல் அந்த சொத்தை எழுதிக்கொடுத்த மருத்துவரின் தொடர்பு எண்ணை கேட்டதற்கு, கடைசிவரை தரவேயில்லை. ஆனால் அவருக்கு பதிலாக அம்மாபேட்டை ஊராட்சிமன்றத் தலைவர் காந்தி நம்மிடம் செல்போனில் தொடர்புகொண்டு, ''அந்த இடம் தொடர்பாக எந்தத் தகவல் வேண்டுமானாலும் என்னிடம் கேளுங்கள். நான்தான் அதை அவருக்கு வாங்கிக் கொடுத்தேன்” என்று தானாக முன்வந்து பேசினார். ஒருவழியாக மருத்துவர் ராமகிருஷ்ணனின் தொடர்பு எண்ணை சேகரித்து, அவரிடம் தொடர்புகொள்ளத் தொடர்ந்து முயற்சித்தும் நம்முடைய அழைப்புக்கு அவர் பதிலளிக்கவில்லை.

இந்த விவகாரம் குறித்து அமைச்சர் கே.என்.நேருவை தொடர்புகொண்டு பேசிய போது, “முதலில் எனக்கு இந்த விவகாரம் குறித்து எதுவும் தெரியாது. நாங்கள் தானமாகக் கொடுத்த சொத்தை நாங்களே ஏன் திரும்பி வாங்க வேண்டும்? நான் அப்படி கொடுத்த எந்த சொத்தை திருப்பி வாங்கியிருக்கிறேன் என்று சொல்லுங்கள்?” என்று கேள்வி எழுப்பினார். ‘‘அதேபோல் தான் அந்த சொத்தை நான் திருப்பி வாங்கச் சொல்லவில்லை. ஒருவேளை இதில் தவறு நடந்திருந்தால் நீங்கள் தாராளமாக செய்தி எழுதுங்கள், எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை'' என்று இணைப்பைத் துண்டித்தார்.

அரசியல் என்றால் பொது வாழ்க்கை என்ற நிலை மாறி, அரசியல் என்றால் தொழில் என்றாகிவிட்டது. தொழிலில் ஒன்றை விட்டுக் கொடுத்து பத்தை எடுப்பார்கள். அதே வகையில், அரசியல் என்ற தொழிலில் தி.மு.க. பிரமுகரான மாத்தூர் கருப்பையா, அமைச்சர் நேருவுக்கே அல்வா கொடுத்து பல தில்லாலங்கடி வேலைகளைச் செய்துவருகிறார். இன்றைய நிலையில் அமைச்சரைவிட அதிக சொத்துக் களுக்கு சொந்தக்காரராக மாறியுள்ளார் என்றே கூறலாம். அதிலும் பொதுஜனமோ, கட்சிக் காரரோ என்ற பாரபட்சமெல்லாம் எப்பவுமே பார்ப்பதில்லை. தொழில் என்று வந்து விட்டால் யாராக இருந்தாலும் மிரட்டி வாங்குவது என்ற நடைமுறையைப் பின்பற்றி வருவதாக தி.மு.க. நிர்வாகிகளே புலம்பித் தீர்க்கிறார்கள்!

–துரை.மகேஷ்

www.nakkheeran.in

பாசமான பெண்ணை ஏமாற்றுகிறவன்...
மோசமான பெண்ணிடம் ஏமாறுகிறான்!




மடோனா
செபாஸ்டியன்

# டூரிங் டாக்கீஸ்

## மீண்டும் டைம் டிராவல்!

சிவகார்த்திகேயன் -வெங்கட்பிரபு காம்போவில் உருவாகும் படத்தின் ப்ரீ புரொடக்ஷன் பணிகள் மும்முரமாக நடந்துகொண்டிருக்க படப்பிடிப்பை நவம்பரில் தொடங்க திட்டமிட்டுள்ளார்கள். சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கிறது. டைம் டிராவல் கான்செப்டில் ஆக்ஷன் நிறைந்த படமாக உருவாகிறது. கதைப்படி இரண்டு ஹீரோயின் கேரக்டர்கள். ஒரு கேரடக்டருக்கு கல்யாணி பிரியதர்ஷனை படக்குழு கமிட் செய்துள்ளது. இவர் ஏற்கனவே வெங்கட்பிரபு இயக்கத்தில் ‘மாநாடு’ படத்தில் நடித்திருந்தார். அதன்பிறகு மீண்டும் இப்படத்தில் வெங்கட்பிரபுவுடன் இணைகிறார். அதேபோல் சிவகார்த்தியேனுக்கு ஜோடியாக ‘ஹீரோ’ படத்தில் நடித்திருந்தார். இப்படத்தில் மீண்டும் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்கிறார். இன்னொரு ஹீரோயினாக கயாடு லோஹர் ஒப்பந்தமாகியுள்ளார்.

## டைரக்டர் சேஞ்ச்!

‘தக் லைஃப்’ முடித்த கையோடு மீண்டும் மணிரத்னம் இயக்கத்தில் நடிக்க சிம்பு முடிவெடுத்திருந்தார். அதற்கான ஆரம்பகட்ட பணிகளும் தொடங்கி, படப்பிடிப்பிற்கான வேலைகளும் பரபரவென நடந்தது. ஆனால் இவை அனைத்தையும் ‘தக் லைஃப்’ ரிசல்ட் பாதித்துள்ளது. இதனால் அதிரடி முடிவெடுத்த சிம்பு, தற்போது வெற்றி மாறனுடன் இணைந்துள்ளார். விரைவில் படப்பிடிப்பு தொடங்குகிறது. கேங்ஸ்டர் ஜானரில் படம் உருவாகிறது. முழுக்க முழுக்க வட சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளார்கள். இப்படத்தை தாணு தயாரிக்கிறார்.




www.nakkheeran.in

**வாழ்க்கை என்பது அனைவரையும் மகிழ்விப்பது அல்ல; யாரையும் காயப்படுத்தாமல் இருப்பதே!**

முன்னதாக தாணு தயாரிப்பில் சூர்யாவை வைத்து 'வாடிவாசல்' படத்தை இயக்கவிருந்தார் வெற்றிமாறன். ஆனால் சில காரணங்களால் அப்படம் கைவிடப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. ஏற்கனவே வடசென்னை படத்தில் சிம்புவுடன் இணைய விரும்பிய வெற்றிமாறன், இப்படத்தில் இணைந்ததுள்ளதால் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்.


சம்யுக்தா

## சீக்ரெட் ஹீரோயின்!

'ரெமோ' பட இயக்குநர் பாக்கியராஜ் கண்ணன் இயக்கத்தில் ராகவா லாரன்ஸ் நடிப்பில் உருவாகும் படம் 'பென்ஸ்.' இப்படத்திற்கு லோகேஷ் கனகராஜ் கதை எழுத, அவரது எல்.சி.யு. பாணியில் உருவாகிறது. அதனால் ஏகப்பட்ட கேரக்டர்கள் படத்தின் உள்ளே வருகின்றன. புதிதாக நிவின் பாலி, ட்புள் ரோலில் வருகிறார். மேலும் கதாநாயகியாக சம்யுக்தா வருகிறார். இவர்களைத் தொடர்ந்து ஹரிஷ்கல்யாணும், மடோனா செபாஸ்டியனும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க இணைந்துள்ளனர். மடோனா ஏற்கனவே எல்.சி.யு.வில் வந்த 'லியோ' படத்தில் விஜய்யின் தங்கை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அந்த கதாபாத்திரமாக பென்ஸ் படத்தில் வருகிறாராம். தொடர்ந்து பல்வேறு நடிகர்கள் இணைந்து வருவதாலும் எல்.சி.யு.விற்கென ஒரு ரசிகர் பட்டாளம் இருப்பதாலும் படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்து வருகிறது. இவர்களைத் தவிர்த்து ஒரு பிரபல ஹீரோயினும் இப்படத்தில் நடிக்கவிருப்பதாக ஒரு தகவல்.

## தமிழுக்கு மாதவன்!

ராஜமௌலி -மகேஷ்பாபு கூட்டணியில் உருவாகும் படம் பான் இந்தியாவை குறிவைத்து உருவாகி வருவதால் இந்தி மற்றும் ஹாலிவுட்டிற்கு பிரியங்கா சோப்ரா, மலையாள மார்க்கெட்டுக்கு பிரித்விராஜ் சுகுமாரன் உள்ளிட்டோர் இருக்கின்றனர். இந்த வரிசையில் தமிழில் இருந்து விக்ரமை அணுகினார் ராஜமௌலி. ஆனால் அது வில்லன் கதாபாத்திரம் என்பதால் விக்ரம் கொஞ்சம் தயங்கினார். இருப்பினும் பேச்சு வார்த்தைகள் நடந்தது. ஆனால் அது சுமுகமாக முடியவில்லை. இதனால் முக்கிய கதாபாத்திரத்தில் மாதவனை புக் செய்துள்ளார். தற்போது ஹைதராபாத்தில் நடந்துவரும் படப்பிடிப்பில் மாதவன் கலந்துகொண்டுள்ளார். உலக அளவிலான ஆக்ஷன் அட்வென்சர் ஜானரில் இப்படம் உருவாகிறது.

**-கவிதாசன் ஜெ.**

NKN140625

# மாணவியை 'அழைத்த' பேராசிரியர்!

–அண்ணாமலை பல்கலைக்கழக சர்ச்சை!

**பா**லியல் வன்கொடுமை செய்து வீடியோ எடுத்து மிரட்டியதாக ஆராய்ச்சிக் கல்வி பயின்றுவரும் மாணவி அளித்த புகாரின்பேரில் அண்ணாமலை பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஜய குமாரிடம் 27 வயதுடைய பெண் ஒருவர் சமீபத்தில் புகாரளித்துள்ளார். அதில் 2018-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலையும் பின்னர் முதுகலையும் படித்ததாகவும், அப்போது அதே துறையில் உதவிப் பேராசிரியராக பணியாற்றிய ராஜா பாலியல்ரீதியாக பழகி வந்ததாகவும் பின்னர் இதுகுறித்து வீடியோ உள்ளதென என மிரட்டிவருகிறார் என்றும், அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் புகாரில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ராஜாவை கடந்த மே 30-ஆம் தேதி இரவு காவல்துறையினர் கைதுசெய்து அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர். ஆரம்பத்தில் ஒப்புக்கொள்ளாத ராஜா தீவிர விசாரணைக்குப் பிறகு மாணவியுடன் தனிமையில் இருந்ததை ஒப்புக்கொண்டார். வழக்குப் பதிவு செய்து அவரை மே 31-ஆம் தேதி இரவு சிறைக்கு அனுப்பினர்.

இதுகுறித்து மாணவியிடம் போலீசார் விசாரித்ததில், இளங்கலை இறுதி ஆண்டு படிக்கும்போது ராஜா மாணவிக்குத் தேவையான உதவிகளைச் செய்துவந்துள்ளார். இதற்காக அந்த மாணவிக்காக அவர் தாராளமாகச் செலவுசெய்துள்ளார். யாருமில்லாத நேரத்தில் மாணவியை வீட்டிற்கு அழைத்து பாலில் மயக்க மருந்து கொடுத்து பாலுறவில் ஈடுபட்டதாகவும், மயக்கம் தெளிந்து அழுத போது, இதுகுறித்த வீடியோவை வெளியிடுவதாக மிரட்டி பலமுறை அத்துமீறியதாகவும் அம்மாணவி தெரிவித்தார்.

தற்போது வெளி



ராஜா



அண்ணாமலை
பல்கலைக்கழகம்

NKN140625

**தனக்காக உதவ யாரும் இல்லை என உணர்ந்தவன், அடுத்து எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நிதானமாகத்தான் இருக்கும்!**

மாநிலத்தில் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டு வரும் நிலையில் தற்போதும் ராஜா தொலைபேசியில் மிரட்டி வருவதாக மாணவி தெரிவித்தார்.

அத்துடன் ராஜாவிடம் ஆராய்ச்சி மாணவராக இருந்த மணிகண்டனும் சம்பந்தப்பட்ட மாணவியை தனிமையில் இருக்க அழைத்துள்ளார். அவர்மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கணவரைக் காப்பாற்றுவதற்காக ராஜாவின் மனைவி மாணவியை மிரட்டியதாக அவர்மீதும் வழக்கு உள்ளது.

பேராசிரியர் ராஜாவின் நெருங்கிய உறவினர் ஒருவர் கூறுகையில், "ராஜா செய்த தவறை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மாணவி-ஆசிரியர் உறவின் புனிதத்தை கெடுத்துவிட்டார். இந்த விவகாரத்தில் ராஜாவின் தற்போதைய மனைவி குறித்தும் வதந்தி பரப்பிவருகிறார்கள். ராஜாவிடம் மாணவியாக இருந்தபோது இதேபோல் நெருக்கமாகி திருமணம் செய்துகொண்டார் என கிளப்பிவருகிறார்கள். ராஜாவின் மனைவி இளங்கலை பயிலும்போது, ராஜா சீனியர் மாணவர். அப்போது இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டது. ராஜாவின் மனைவி, பட்டிய லினத்தவர் என்பதால் மிகுந்த போராட்டத்துக் குப் பின்னே இவர்களது திருமணம் நடந்தது.

மாணவி- ராஜா உறவு குறித்து 2019-20லேயே ராஜாவின் மனைவிக்கு தெரிய வரவே அவர் கண்டித்துள்ளார். இதனால் இருவருக் கும் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தது. பின்னர் அவர் படிப்பை முடித்துச்சென்று விட்டார். ஆனால் தற்போது 5 வருடம் கழித்து பழிவாங்கும் நோக்கில் புகாரளித்துள்ளது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ராஜாவின் ஆராய்ச்சிப் படிப்பு மாணவ ராக இருந்த மணிகண்டனும் பாதிக்கப்பட்ட மாணவியும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே சமூகத்தினர். ராஜாவின் அனைத்து விஷ யங்களையும் தெரிந்த மணிகண்டன், மாணவி யிடம் தனியாகப் பேசவேண்டும், தனிமையில் இருக்கவேண்டும் என வற்புறுத்தியுள்ளார். அதற்கு மாணவி மறுக்கவே, நீ ராஜா சார்கூட இருந்ததை அவர் வீடியோவாக எடுத்து வைத்துள்ளார் என மிரட்டியுள்ளார்.



எஸ்.பி. ஜெயகுமார்

இதில் அதிர்ச்சியடைந்த மாணவி, நம்பிக் கையா பழகியவர், வீடியோ எடுத்து வைத்துள்ளாரே, இதனால் நம் வாழ்க்கையே போய்விடுமோ என்ற கோபத்தில் புகாரளித்துள்ளார். இதுகுறித்து மணிகண்டன் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவரை கைதுசெய்யும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக போலீசார் கூறுகின்றனர். மாணவியின் செல்போனை ஆய்வுசெய்தால் இந்த பிரச்சனையின் பின்னால் யார் உள்ளார் என்பது தெரியவரும்.

ராஜா, வகுப்பில் மாணவ -மாணவிகள் தவறு செய்தால் உடனே அனைவர் மத்தி யிலும் அசிங்கமாகத் திட்டிவிடுவார். பின்னர் ஸாரி கேட்பார். அப்படி ஒரு மாணவியைத் திட்டி, அதனால் எழுந்த பிரச்சனையால் 4 வருடம் பல்கலைக்கழகத்தை விட்டு படிப்பு மையங்களில் பணியாற்றவைத்தனர். இதனால் அவருக்கு பேராசிரியர் பதவி கிடைக்காமல் போனது" என்கிறார்.

கடலூர் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் ஜெயகுமாரோ, "கைதுசெய்து பலமணி நேரம் விசாரணையின்போது, குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் இருந்தார். அவர்களின் உரையாடலைப் போட்டுக் காட்டியபோது தான் வேறுவழியின்றி நடந்ததை ஒப்புக் கொண்டார். மணிகண்டன் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்று யாராவது பாதிக்கப்பட்டால் தைரியமாக முன்வந்து புகாரளியுங்கள். மாணவி, ராஜா செல்போன்கள், லேப்டாப் உள்ளிட்டவை ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள் ளது. அதன் முடிவுவந்தால் யாரெல்லாம் இதில் தொடர்பிலுள்ளார்கள் என்ற தெளிவான சித்திரம் கிடைக்கும்" என்றார்.

**-அ.காளிதாஸ்**

NKN140625

(சென்ற இதழ் தொடர்ச்சி)



# சூதா

## திசைமாறும் குடு

-எச்சரிக்கும்

ஆன்லைன் ரம்மி, ஆன்லைன் கேம்ஸில் பணத்தை இழக்கும் பெண்கள், நண்பர்களிடம், உறவினர்களிடம் வாங்கிய கடன் பணத்தை திருப்பித் தருவதற்காக வீட்டுக்குத் தெரியாமல் சிலர் நகையை அடமானம் வைத்து கடனைத் திருப்பிச் செலுத்துகின்றனர். சிலர் தாய் வீட்டில் சொல்லியழ, மகளின் வாழ்க்கை பறிபோய்விடுமே எனப்பயந்து கடன் வாங்கித் தந்து மகளை அதிலிருந்து மீட்கின்றனர். இதற்கெல்லாம் வழியில்லாத பெண்கள் இணைய கடன்காரர்களிடம் கடன் வாங்க வைக்கப்படுகின்றனர்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய திருவண்ணா மலையைச் சேர்ந்த சைபர் க்ரைம் பிரிவு அதிகாரி ஒருவர், “நாம் ஒருவரைத் தொடர்புகொண்டு கடன் கேட்டோ அல்லது நேரிலோ பேசினால் நம் கையிலுள்ள மொபைல் போன் ஏ.ஐ. டெக்னாலஜி யால் அந்த பேச்சு உள்வாங்கப்பட்டு அடுத்த நிமிடத்திலிருந்து நாம் பயன்படுத்தும் முகநூல், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் குறுஞ்செய்தி வழியாக இரண்டு நிமிடத்தில் உங்களுக்குக் கடன் தரப்படும், நோ புரோக்கரேஜ் கமிஷன், நோ டாக்குமெண்டேஷன் சார்ஜ் என்கிற விளம்பரங்கள், மெசேஜ்கள் ஆட்டோமேட்டிக்காக நமது மொபைலுக்கு வரும்.

இதை கடன்கேட்டுத் தத்தளிக்கும் பெண்கள் பார்க்கும் போது, நமக்கு தெரிஞ்சவங்களே உதவமாட்டேன்கிறாங்க, ஏன்? எதுக்கு?ன்னு ஆயிரம் கேள்வி கேட்கிறாங்க, ஆன்லைனில் அப்படி எதுவும் கேட்கப்போவதில்லை, நாம் யார் எனத் தெரியப்போவதில்லை, கடன் வாங்கினாலும் யாருக்கும் தெரியப்போவதில்லை என நினைத்துக்கொண்டு ஆன்லைன் கடன் நிறுவனங்களிடம் கடன் வாங்குகிறார்கள். அவர்களும் உடனே எவ்வளவு தொகை எனக் கேட்டு வங்கிக் கணக்கு எண், ஃபான் எண், ஆதார் கார்டுகளை வாட்ஸ்அப் வழியாக வாங்கிக்கொண்டு அல்லது அவர்களது கடன் ஆப் இன்ஸ்டால் செய்யச்சொல்லி அதைச் செய்ததும் அதில் டாக்குமெண்ட் அப்லோட் செய்யச்செய்து, உடனே நமது வங்கிக் கணக்கில் கடன் தொகையை சர்வீஸ் சார்

செய்துவிடுகிறார்கள்.

அவர்களின் ஆப் இன்ஸ்டா

வாங்கியவரின் மொபைல் போன்

போய்விடும். மொபைலிலுள்ள ஆ

வாட்ஸ்அப் தகவல் என அனைத்தையு

வீடியோக்களை எடுத்துவைத்துக்கெ

கட்ட தாமதமானாலோ, கட்டாமல்

புகைப்படத்தை செக்ஸியாக மார்பிங்

கான்டாக்ட் லிஸ்டிலுள்ள அனைவ

அனுப்பி நீங்க கட்டுங்க என அசி

மொபைலுக்குள் உள்ள டேட்டாவு

www.nakkheeran.in



சிக்கலிலும், சிக்னலிலும் பொறுமையாகக் காத்திரு



# ட்டம்!

## ம்ப வாழ்க்கை!

### ம நிபுணர்கள்!

ஜ் பிடித்துக்கொண்டு கிரெடிட்

ல் செய்த நொடியிலிருந்து கடன் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் ஆடியோ, வீடியோ, போட்டோ, யும் கண்காணிப்பார்கள். போட்டோ- காள்வார்கள். ஒரு மாதம் இ.எம்.ஐ. விட்டாலோ, கடன் வாங்கியவரின் செய்து மிரட்டுவார்கள். மொபைல் வருக்கும் கடன் வாங்கிய தகவலை ிங்கப்படுத்துவார்கள். நம்முடைய ம், நமது போட்டோ -வீடியோவும் தான் அவர்களுக்கு அடமானமே. அதை வைத்துதான் பணம் தருகிறார்கள். இந்த சூழ்ச்சி தெரியாமல் கடன்வாங்கி மாட்டிக்கொள்கிறார்கள்" என்றார்.

ரம்மி, கேம்ஸ் போன்றவற்றால் உருவான கடனை அடைக்க, ஆன்லைன் கடன்காரர்களிடம் கடன் வாங்கி சிக்கிக்கொள்பவர்கள், அதனை அடைக்க குடும்பப் பெண்கள் எடுக்கும் தவறான வழி அவர்களை அடுத்த புதை குழிக்குள் தள்ளுகிறது. இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்டத்தில் வலம்வரும் பாலியல் பெண் புரோக்கர் ஒருவர் நம்மிடம் பகிர்ந்துகொண்ட தகவல் அதிர்ச்சி ரகம். 'மொபைலில் விளையாடினேன் கடனாகிடுச்சி, அதை அடைக்க ஆன்லைன்லயே கடன் தர்றவங்ககிட்ட வாங்கினேன். குறிப்பிட்ட தேதிக்குள்ள இ.எம்.ஐ. கட்டணும், கட்டலன்னா அசிங்கமா பேசறாங்க, என்னோட நிர்வாண போட்டோவ (மார்பிங்) செய்து எல்லோருக்கும் அனுப்பிடுவோம்னு மிரட்டறாங்கன்னு சொல்லி அழுவறாங்க.

இப்படி ஏமாந்தது எங்க வீட்டுக்காரருக்கோ, குடும்பத்துக்கோ தெரிஞ்சா பிரச்சனையாகிடும். என்னை வீட்டை விட்டுத் துரத்திடுவாங்க, அப்படி நடந்தா நான் சூசைட் செய்துக்கறத தவிர வேறவழியில்லன்னு அழுவறாங்க. பணம் வேணும், கடன் அடையற வரைக்கும், நீங்க சொல்றதைச் செய்யறேன்னு கெஞ்சறாங்க. இது அதைவிட மோசமானது, இதில் ஒருமுறை வந்துவிட்டால் திரும்பமுடியாது எனச்சொன்னால் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். தற்கொலை செய்துக்கறதை தவிர வேற வழியில்லன்னு சொல்றாங்க. தினமும் ஒருமணி நேரம், இரண்டு மணி நேரம் எனச் சொல்லி வருகிறார்கள். குடும்பப் பெண்களுக்கு இந்த தொழிலில் டிமாண்ட் இருப்பதால் கண்டிஷனை கஸ்டமர்கள் ஒப்புக்கொண்டு கேட்ட தொகையைத் தருகிறார்கள். இவர்களுக்கு தேவையான பணம் கிடைத்துவிடுகிறது, பணத்தை ஏமாந்துட்டு அதை அடைக்க வழிதெரியாம இதுல வந்து சிக்கறாங்க, என்ன செய்யறது" என்றார்.

இதுகுறித்து திருவண்ணாமலையிலுள்ள மனநல மருத்துவர் சீதா கோபாலகிருஷ்ணனிடம் கேட்டபோது, "இணைய சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஆர்வம் மற்றும் பொழுது போக்குக்காகவும், சிலர் மனஅழுத்தம், தனிமை, வேலையில் லாமை போன்றவற்றை மறக்கவும், இன்னும் சிலர் தங்களது பணத்தேவைக்காகவும் ஈடுபடுகிறார்கள். இதற்கு ஆண், பெண் என்கிற பேதமில்லை. பெண்கள் திருமணமானதும் தனது

படம்: AI தொழில்நுட்பம்

ந்தால் போதும்... வழி தானாக கிடைத்துவிடும்!

**இலக்குகளும், இலட்சியங்களும் உறுதியாக இருந்தால் மட்டுமே எத்தனை தடவை விழுந்தாலும்; தோற்றாலும் திரும்பவும் எழுந்து பயணிக்க முடியும்!**

குடும்பத்தினர், நண்பர்களைவிட்டுப் பிரிந்து இடம்பெயர்ந்து கணவன், அவரது வீடு என வந்தபின் அவர்களுக்கு மனதளவில் ஒரு தனிமை உருவாகிவிடுகிறது. அதோடு குடும்பத்தில் அவருக்கான மன அழுத்தம் உருவாகி அதிலிருந்து வெளியே வரமுடியாமல் உழல்கிறார்கள். ஆண்களுக்கு மனஅழுத்தம் இருக்கிறது எனச்சொல்லி நண்பர்களுடன் சென்று மது அருந்துவது, புகைபிடிப்பது போல் பெண்களால் செய்யமுடியாது. மனைவியானவள் தனது கணவரிடம் சின்னச் சின்ன தேவைக்கு பணம் கேட்டால் ஏன்? எதற்கு? எனப் பலப் பல கேள்விகளைக் கேட்கிறார்கள். நாப்கின் வாங்கக்கூட பெண்கள் கணவரை எதிர்பார்க்கவேண்டிய நிலையில் உள்ளனர். இது அவர்களின் சுயமரியாதை மீது தொடுக்கும் தாக்குதல். இப்படி அசிங்கப்படுவதற்கு நாம் ஏதாவது வேலைசெய்து சம்பாதிக்கலாம் என நினைக்கிறார்கள். பெரும்பாலான ஆண்கள் தங்கள் மனைவி வெளியே சென்று வேலைசெய்ய விடுவதில்லை. இதனால் தனது தனிமையை போக்கிக்கொள்ள தொலைக்காட்சி சீரியல்கள் பக்கமும், மொபைலில் கேம்ஸ் விளையாட்டின் பக்கமும் மனதை மாற்றிக்கொள்ள முயற்சிப்பார்கள்.


சீதா கோபாலகிருஷ்ணன்

ஒருவருக்கு இணையம் Anonymity அதாவது அடையாளமறைவு தருவதால் அது பெண்களுக்கு கூடுதல் தைரியத்தையும், ஆர்வத்தையும் தந்து பாதுகாப்பாக நினைக்கிறார்கள். அதனால் பெண்கள் கேம்ஸ், ரம்மி விளையாட்டின் பக்கம் போகிறார்கள். அதோடு, விளம்பரங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சில சூதாட்ட நிறுவனங்கள் சட்ட வரம்புகளை மீறி விளம்பரம் செய்கின்றன. வயதானவர்கள் தனிமையை போக்கிக்கொள்ள ரம்மி விளையாடுவதுபோல் விளம்பரம் வருகிறது. அதேபோல் பெண்கள் வீட்டிலிருந்து சம்பாதிக்க எளிய வழி என்கிற விளம்பரங்களை நம்பி நாமளும் விளையாடலாம், பணம் வந்தால் லாபம்தானே என நினைத்து விளையாடுகிறார்கள், அதன்பின் அதிலிருந்து அவர்களால் வெளியே வரமுடிவதில்லை. பணம்வைத்து விளையாடும்போது, நட்டம் ஏற்பட்டால் விட்ட பணத்தைப் பிடிக்க கடன் வாங்கி மீண்டும் விளையாடுவார்கள். அதுதான் மனிதனின் மனநிலை. சிலர் இதில் அடிக்டாகிவிடுவார்கள். திருமணமாகி குழந்தை பெற்ற பொண்ணுக்கு நல்லது கெட்டது தெரியாதா எனக் கேட்பார்கள். உண்மையில் பெரும்பாலான இளம்பெண்களுக்குத் தெரிவதில்லை. வீடு, பள்ளி, கல்லூரி, சமூகம் எனப் பெண்கள் எல்லா இடத்திலும் அழுத்திவைக்கப்பட்டு வெளியுலகமே தெரியாமல் வளர்க்கப்பட்டு, திருமணம் செய்துவைத்துவிடுகிறார்கள், அதுவும் சிக்கலுக்கு காரணம்.

ஒருவருக்கு பெரியளவில் பணநட்டம் வரும்போது கடனுக்குப் பயந்து தற்கொலை முடிவோ அல்லது வேறு முடிவுகளோ எடுத்துவிடுகிறார்கள். இதனை விழிப்புணர்வு வழியாகவே தடுக்கமுடியும். அதுவும் பன்முகமாக இருக்கவேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்னியோன்யம் இருக்கவேண்டும், புரிதல் இருக்க வேண்டும். வீட்டில் யாராவது ஒருவர் மொபைலில் அதிக நேரம் இருந்தால் ஏன்? என்ன? எதற்காக? என ஆராயவேண்டும். தவறு செய்தால் அதனை மாற்ற முயற்சிக்க வேண்டும். சிறுவயதில் இருந்தே உலக அறிவு குழந்தைகளுக்கு தரப்படவேண்டும். எந்த சூழ்நிலையிலும் கைவிடமாட்டோம் என்ற நம்பிக்கையை பிள்ளைகளுக்கு பெற்றோரும், திருமணத்துக்கு பின்னர் இணையரும், குடும்ப அங்கத்தினர்களும் தரவேண்டும். சமூகமும் அவர்களுக்கு நம்பிக்கை தரும்விதமாக நடந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் தவறான வழிக்கு செல்வது தடுக்கப்படும்'' என்றார்.

நமது கைகளில் வெடிகுண்டை விட மோசமான செல்போனை வைத்துக்கொண்டிருக்கிறோம். அதை எப்படிப் பயன்படுத்துவது என்பது தெரியாவிட்டால், அது ஏற்படுத்தும் சேதாரம் மிக அதிகம்!

**-து.ராஜா, பகத்சிங்**

www.nakkheeran.in



ஜிங்கா கோல்டு™
GMP
GOOD MANUFACTURING PRACTICE
CONSISTENT QUALITY
CERTIFIED
ISO
9001:2008
COMPANY
Jinga Gold™
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/-
மட்டுமே
ஒன்னு போதும்
நின்னு பேசும் !
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY
MedPlus
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
SUPER STOCKIST
SRUTI'S
மாவட்ட வாரியான உதவிக்கு
90036 40742
ஹெல்ப் லைன்
9962 66 4444
For Personal Delivery
9962 808090


Advt






எடப்பாடியுடன் ஆற்றல் அசோக்குமார்

# 50 கோடி மோசடி! சிக்கிய ஈரோடு அ.தி.மு.க. புள்ளி!

ஆற்றல் அசோக்குமார் என்ற பெயரை தமிழக மக்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில், மற்ற அனைத்து வேட்பாளர்களின் சொத்துக்கணக்கைக் காட்டிலும், ஈரோடு பாராளுமன்றத் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்ட அசோக் குமாரின் சொத்துமதிப்பு அனைவரையும் அசரடித்தது. தனக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஆயிரம் கோடி வரை உள்ளதாக வேட்பு மனுவில் குறிப்பிட்டிருந்தார். வட இந்திய ஊடகங்கள்வரை இவரது சொத்துமதிப்பு பரபரப்பாகப் பேசப்பட்டது.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் கே.இ.பிரகாஷ் டெபாசிட் வாங்குவாரா என்றெல்லாம் தொலைக்காட்சிகளில் விவாதங்கள் நடைபெற்றபோது, இந்த ஆற்றல் அசோக்குமார் ஒரு டுபாக்கூர் என்றும், நம்பத்தகுந்தவர் இல்லையென்றும், இங்கு தி.மு.க. அமோகமாக வெற்றிபெறுமென்றும் அப்போதே நக்கீரனில் எழுதியிருந்தோம். அதுபோலவே தி.மு.க. வேட்பாளர் பிரகாஷ் 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

தேர்தலுக்கு நான்கு மாதங்களுக்கு முன்புவரை பா.ஜ.க.விலிருந்த இந்த அசோக்குமார், அங்கிருந்து விரட்டப்பட்ட நிலையில், 100 கோடி வரை செலவு செய்கிறேன், ஓட்டுக்கு பத்தாயிரம் கொடுக்கிறேன், திருப்பூர், கோயம்புத்தூர் தொகுதி செலவையும் நானே செய்கிறேன் என்றெல்லாம் எடப்பாடியிடம் பீலா விட்டு வேட்பாளரானார். அ.தி.மு.க. சீனியரான செங்கோட்டையன் உட்பட பலரும்

NKN140625

அப்போது எதிர்ப்பு தெரிவித்தார்கள். இருந்தும் நம்பி ஏமாந்தது அ.தி.மு.க. தலைமை.



அப்படிப்பட்ட மோசடியாளரான ஆற்றல் அசோக்குமார் மீதுதான் இப்போது சுமார் 50 கோடி மோசடிப் புகார் எழுந்துள்ளது. அ.தி.மு.க.வின் திருச்செங்கோடு முன்னாள் எம்.பி. சௌந்தரத்தின் மகன், தற்போதைய மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி பா.ஜ.க. எம்.எல்.ஏ. சரஸ்வதியின் மருமகனுமானவர்தான் இந்த அசோக்குமார். ஈரோட்டில் பிரபலமான மருத்துவராகவும், இந்தியன் பப்ளிக் ஸ்கூல் என்ற தனியார் பள்ளியை நடத்தி வந்தவர் தான் சரஸ்வதி. ஈரோட்டைத் தொடர்ந்து கோவை, கரூர், மதுரை, பெங்களூர், ஹைதராபாத் எனப் பல இடங்களில் இந்த பள்ளியை நிறுவினார் சரஸ்வதி.


சி.கே.சரஸ்வதி எம்.எல்.ஏ.

மருமகன் என்ற அதிகாரத்தில் கோவை, கரூர், மதுரை பள்ளிகளைத் தன் வசமாக்கிக்கொண்டார் அசோக்குமார். இது தவிர வெளிநாடுகள் சிலவற்றிலும் இந்த பள்ளிகளைத் தொடங்கி பல கோடி வருமானத்தை ஈட்டியுள்ளார் அசோக் குமார். இந்தப் பள்ளிகளில் ஷேர் ஹோல்டராக பலரை இணைத்து அவர்களிடம் பல கோடிகளைப் பெற்றுள்ளார்.

ஒரு கட்டத்தில் கோவையிலுள்ள இந்தியன் பப்ளிக் ஸ்கூல் குரூப் பள்ளியில் நிர்வாக ரீதியாக பிரச்சனை ஏற்பட, அசோக்குமார் கோடிக்கணக்கான ரூபாய் மோசடி செய்துள்ளதை உறுதிப்படுத்திய நிர்வாகக் கமிட்டியினர், சென்ற மூன்று மாதங்களுக்கு முன்பு அசோக்குமாரை நிர்வாக இயக்குனர் பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு அவருக்கு பதிலாக ஜெயராம் பாலகிருஷ்ணன் மற்றும் சிவசங்கரன் ஆகிய இருவரை நியமித்துள்ளனர். பொறுப்புக்கு வந்தவர்கள் பள்ளியின் வரவு-செலவுக் கணக்கு வழக்குகளை பார்த்தபோது அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

பள்ளியின் நிர்வாக இயக்குனர்கள் கூட்டத்தில் தீர்மானம் போடப்பட்டதுபோல் போலியாக ஆவணங்கள் தயாரித்து பல மோசடிகளைச் செய்திருக்கிறார். பள்ளிக்கு புதிதாக பல பேருந்துகள் வாங்கியதாக 10 கோடி ரூபாய்க்கு மேல் கையாடல் செய்திருக்கிறார். அசோக்குமார் பள்ளியின் நிர்வாகப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, 2025-2026 கல்வியாண்டுக்கான கட்டணத்தை முழுமையாக செலுத்துமாறு அப்பள்ளியில் படிக்கும் 3,000 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு பள்ளி இமெயில் முகவரி மூலம் தகவல் சென்றுள்ளது. கட்டணத்தை செலுத்த 'இந்தியன் பப்ளிக் ஸ்கூல் எக்ஸலென்ஸ்' என்ற லிங்க்கும், வங்கிக்கணக்கும் தரப்பட்டிருக்கிறது. இதை நம்பிய பெற்றோர் அனுப்பிய பணம் சுமார் 40 கோடியும் அசோக்குமாரின் வங்கிக்கணக்கிற்கு செல்ல, அத்தனையையும் சுருட்டியிருக்கிறார். தற்போதைய நிர்வாகக்குழு, பெற்றோர்களிடம் பணம் செலுத்துமாறு அறிவுறுத்தியபோது தான் அசோக்குமாரின் நூதன மோசடி தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கோவை மாநகரக் குற்றப்பிரிவில் சிவசங்கரன் புகாரளிக்க, போலீசார் ஆற்றல் அசோக்குமார் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த பள்ளி ஊழியர்கள் கில்பர்ட் ஜேம்ஸ், லூர்துராஜ், கார்த்திகேயன், துரைசாமி, சொக்கலிங்கம், விஜயகுமார், பிரபாகரன் ஆகியோர் மீது நம்பிக்கை மோசடி, ஏமாற்றுதல், சதித்திட்டம் உள்ளிட்ட ஏழு பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்கள். இதேபோல் பெண் ஊழியர்களை வன்கொடுமை செய்தது உட்பட இன்னும் பல வழக்குகளும் அசோக்குமார் மீது பதிவாகியுள்ளது.

பல்வேறு மோசடிகள் மூலம் கோடிக்கணக்கில் கொள்ளையடித்து அரசியல் களத்தை அதிரவைத்த ஆற்றல் அசோக்குமார் விரைவில் கைது செய்யப்படவுள்ளார். அப்போது, கடந்த தேர்தலில் எடப்பாடி உள்ளிட்ட அ.தி.மு.க. தலைமைக்கு எவ்வளவு கோடி கொடுத்தேன் என்று வாக்குமூலம் கொடுக்கவுள்ளாராம். இதனால் எடப்பாடி வட்டாரம் பீதியடைந்துள்ளது. மோசடி மன்னன் அசோக்குமாரின் மனைவி கருணாம்பிகை சென்ற 5ஆம் தேதி கோவை தனியார் மருத்துவமனையில் திடீரென மரணமடைந்தார். மொடக்குறிச்சி தொகுதி பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான சரஸ்வதியின் மகள் கருணாம்பிகை இறப்பும் அரசியல் களத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

**-ஜீவாதங்கவேல்**

www.nakkheeran.in

# லட்ச ரூபாய் கதை!

ஒரு பிரபல தெலுங்கு தயாரிப்பாளர், ஆந்திராவின் அன்றைய சூப்பர் ஸ்டார்ஸ் ராமாராவ் மற்றும் நாகேஸ்வரராவ் இருவரிடமும் பேசி, பதினோரு வருடங்களுக்குப் பின்னால் ஒரு சமூக கதையில் மீண்டும் இணைந்து நடிக்க சம்மதம் பெற்றார். ஆனால் கதை இருவருக்கும் பிடிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் தயாரிப்பாளர் கதைக்காக அலைந்தார்... கிடைக்கவில்லை. ஒரு நாள் திடீரென என் அலுவலகம் வந்தார். அந்தக் காலகட்டத்தில் நான் பிஸி. இருப்பினும் வந்தவர் பெரிய தயாரிப்பாளர் மட்டுமல்ல, மிகவும் நல்லவர். அவர் இரு நாயகர்களுக்கு கதை வேண்டுமென்றார். சில நிமிடங்கள் சிந்தித்தேன். இரு வரையும் திருப்திபடுத்தும் விதமாக கதையை ரெடி பண்ணுவது



என்.டி.ஆர். -எம்.ஜி.ஆர்: ஒரு தெலுங்கு படப்பிடிப்பின்போது...

NKN140625

www.nakkheeran.in

# சினிமா கொட்டகை 97

சுலபமான விஷயமல்ல. அப்பல்லாம் கலைஞர் மட்டும்தான் படத்துக்கு லட்ச ரூபா பெறுபவர் எனச் சொல்லுவார்கள். அதையே நானும் கேட்டேன். இருவரும் கதையை ஓ.கே. செய்ததும் எனக்கு லட்ச ரூபாய் தரவேண்டும் எனக் கேட்டேன்... அவர் சம்மதித்தார். ‘கதை எப்போது சொல்ல முடியும்’ எனக் கேட்டார். ஒரு வாரத்தில் தயார்பண்ணிவிடுவதாகச் சொன்னேன், ஒப்புக் கொண்டார். இது வெறும் பணத்துக்கான வேலையல்ல. ஒரு எழுத்தாளனுக்கான சவால். ஈசன் அருளால் இன்றுவரை எந்தக் கதையையும் யாரும் வேண்டாமெனச் சொன்னதில்லை. ஒருவாரம் கழித்து தயாரிப்பாளரிடம் கதையைச் சொன்னேன். அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. ஹைதராபாத் சென்று ராமாராவின் ராமகிருஷ்ணா ஸ்டுடியோவில் அதிகாலை ஐந்துமணிக்கு அவருக்கு கதை சொல்ல ஆரம்பித்தேன். இன்டர் வெல் வரை சொன்னபோது, ஒரு அழகான இளைஞர் இரண்டு, மூன்று டிபன் கேரியர்கள் அடங்கிய கூடையை தூக்கிக்கொண்டு உள்ளே வந்தார்.

“குகநாதன்காரு என் சாப்பாடு வந்தாச்சு... சாப்பிட்டிட்டு மீதியைக் கேட்கலாமா?” என்று கேட்டார். அந்தப் பண்புக்கே நான் தலையாட்டித்தான் ஆகணும். கூச்சப்படாமல் கோழி, மட்டன், முட்டை, காய்கறி சகிதம் ஃபுல் மீல்ஸ் சாப்பிட்டார். அப்போதுதான் அப்பாவுக்கு சாப்பாடு கொண்டு வந்தது அவர் கடைசி மகன் பாலகிருஷ்ணா எனத் தெரிந்துகொண்டேன். அச்சமயம் கனவில் கூட நினைக்கவில்லை... நான் பிற்காலத்தில் அவருக்கு கதைகள் எழுதுவேன் என்று.

மறுபடி ராமாராவ் ஸார் வந்தமர்ந்தார் கதை கேட்பதற்கு. அப்போது அவர் ஒரு தகவலைச் சொன்னார். அதைக் கேட்டதும் நான் அதிர்ந்து போனேன். அவர் அதிகமாக புராணப் படங்களில் ராமர், கிருஷ்ணர், கண்ணன், கர்ணன், துரியோதனன் போன்ற வேஷங்களில்தான் நடிப்பார். அந்த வேஷம் போட்டு தயாராக எப்படியும் இரண்டு மணி நேரத்துக்கு மேலாகும். அந்தக் காலத்தில் புஜம், கை, கால், நெஞ்சு, இடுப்பு, கழுத்து, வயிறு எல்லா இடத்துக்கும் நகைகள், கவசங்கள் மாட்டவேண்டும். அவை தகரம்போல் இறுக்கமாக கட்டினால் உடலின் சதையை வெட்டும். கிரீடம் செம பாரம். இதையெல்லாம் போட்டுக்கொண்டு ‘கதை’ (கதாயுதம்) போன்ற ஆயுதங்களை தூக்கி சண்டை வேறு போடவேண்டும். அது சாதாரண விஷயமில்லை. அவர் இதையெல்லாம் அணிந்து கொண்டு எட்டரை மணிக்கெல்லாம் செட்டில் ஆஜராகிவிடுவார். லஞ்ச் பிரேக் நேரத்தில் இதையெல்லாம் கழட்டிவிட்டு சாப்பிட்டுவிட்டு மறுபடி மாட்ட வேண்டுமானால் குறைந்தபட்சம் மூன்று மணி நேரமாகும். அதனால் மதியம் ஏதாவது குடிப்பார்... சாப்பிடமாட்டார். அது மட்டுமல்ல, இந்த நகைகளை அணிந்துவிட்டால் குனிந்து, நிமிர்ந்து, வளைந்தெல்லாம் உட்கார முடியாது. சதையை வெட்டிவிடும்... அதனால் எப்போதும் நிமிர்ந்தே உட்காரவேண்டும். அவர் அணியும் அந்த நகைகள் குறைந்தபட்சம் முப்பது கிலோ இருக்கும். அதனால் மாலை ஆறுமணிக்கெல்லாம் படப்பிடிப்பை முடித்துவிடுவார். இரவு ஒன்பது மணிக்கு முன் படுக்கப் போய்விடுவாராம். அதனால் அவரின் மதிய போஜனம் காலை ஐந்தரை மணி என வழக்கமாகிவிட்டது. அவரது புன்னகை எப்போதும் அழகாயிருக்கும். அவர், நான் எப்ப போனாலும் ‘பிரதர்காரு எலா உன்னாரு?’’ எனக் கேட்கத் தவறுவதேயில்லை. எம்.ஜி.ஆர். மீது அவ்வளவு பிரியம் உள்ளவர். இதில் இன்னொரு விஷயம் எம்.ஜி.ஆருக்கும் இவருக்கும் ஒரே ஒப்பனையாளர்தான். அவர்தான் பீதாம்பரம் ஸார். நம்ம இயக்குநர் வாசுவின் தந்தையார்.

ராமாராவ் ஸார், பின்னர் கதையின் இரண்டாவது பகுதியையும் கேட்டுவிட்டு என்னைப் பாராட்டினார். தயாரிப்பாளரிடம் ‘ஓ.கே.’ சொன்னார். இன்னும் ஒன்றையும் சொன்னார். “எனக்கு பூரண சம்மதம்... ஆனால் இந்தக் கதையிலே அவருக்கு என்ன இருக்கு? சம்மதிப்பாரா? கதையைச் சொல்லி அபிப்பிராயத்தை தெரிஞ்சுக்குங்க” என்றார். அன்றே பதினோரு மணிக்கு நாகேஸ்வரராவுக்கு கதை சொல்லப் போனோம். அவர் கதையை கேட்டு, என்னைப் பாராட்டி விட்டு தயாரிப்பாளரிடம், “இதிலே பிரதருக்கு என்ன இருக்கு? அவர்



டைரக்டர்-ரைட்டர் வி.சி. குகநாதன்

NKN140825



நாகேஸ்வரராவ்

சம்மதிப்பாரா? போய் முதல்ல அதைத் தெரிஞ்சுக்குங்க'' என்றார். முதல்லே அவர்கிட்ட கதையைச் சொல்லிவிட்டு வந்தோம்னு தயாரிப்பாளர் சொல்லவே... நானும் வாயைத் திறக்கவில்லை. மகிழ்ச்சியிலிருந்த தயாரிப்பாளர், சென்னை வந்ததும் எனக்கு லட்ச ரூபாயைத் தந்துவிட்டார். இது ஒரு சாதனை என்றே எனக்குத் தோன்றியது. இந்த சேதி ஊடகங்கள் மூலம் பரவியதும், எனக்கு பாராட்டுக்கள் குவிந்தன.

சென்னை வந்த பின்னால் பாலாஜி என்னை சந்திக்க வந்தார். 'அந்தக் கதையை எனக்குச் சொல்ல முடியுமா?' என்று கேட்டார். அவரின் திட்டம் எனக்குத் தெரியாது. ஓரளவு புரியும்படியாக முழு திரைக்கதையையும் சொல்லாமல் அவுட்லைனை மட்டும் சொன்னேன், பாராட்டினார்.

ராமாராவ், நாகேஸ்வரராவ் நடித்த ஷூட்டிங்கிற்கு என்னால் போகமுடியவில்லை. எழுத்துப் பணி, இயக்கும் பணி, தயாரிப்பு என பல கம்பெனிகளின் வேலை. படம் முடிந்ததும் போட்டுக் காட்டினார்கள். இரு பெரும் ஹீரோக்கள் என்பதால் ஒன்பதுக்கு மேல் பாடல்கள். அவர், இவரைப் புகழ... இவர், அவரை பதிலுக்குப் புகழ... நிறைய அனாவசிய வசனங்கள் படத்தின் வேகத்தை இது குறைத்துவிட்டது. ஆனாலும் படம் வெள்ளிவிழா கண்டது. இதற்குள் 'ரீமேக்' மன்னன் பாலாஜி இந்தப் படத்தை எம்.ஜி.ஆர். -சிவாஜி இருவரையும் நடிக்க வைத்து எடுக்கத் திட்டமிட்டுவிட்டார். படத்தை வாங்கவும் பேச்சுவார்த்தை தொடங்கிவிட்டார். திடீரென எனக்கு எம்.ஜி.ஆரிடமிருந்து அழைப்பு வந்தது, போனேன். "இந்தக் கதை உங்களது தானா?" என்று கேட்டார். இதைவிட பலமடங்கு நல்ல படங்களில் நீங்கள் நடித்துவிட்டீர்கள் என வெளிப்படையாகச் சொன்னேன். மறுநாள் முன்பணத்தோடு போன பாலாஜியை, வேறு படம் பண்ணலாம் என்று சொல்லி, திருப்பியனுப்பிவிட்டார் எம்.ஜி.ஆர்.

'To learn Cinema you must see more number of pictures' என என் தலையில் ஏறும்விதமாக சிறுவயதில் யாரோ சொன்னது... அதை இன்றுவரை கடைப்பிடித்து வருகிறேன்.

படம் பார்ப்பது என்பது எனக்கு பைத்தியம் போல ஆகிவிட்டது. புதிய தெலுங்குப் படங்கள் வந்தால் திருப்பதிக்குப் போய் பார்த்துவிடுவேன். ராமாராவ் நடித்த படமொன்று ரிலீஸ் எனத் தெரிந்ததும் காரில் திருப்பதி போனேன். விநியோகஸ்தர்கள் அலுவலகம் போய் டிக்கெட் ஏற்பாடு செய்து படம் பார்த்தேன். பிளாக் அண்ட் ஒயிட் படம்தான். ஆனால் கதை சூப்பர். அதை யாராவது வாங்கி தமிழில் எடுத்தால், அதில் எம்.ஜி.ஆர். நடித்தால் நிச்சயம் வெற்றிவிழா ஓடும் என எண்ணினேன். அதே எண்ணத்தோடு சென்னை திரும்பிய நான், எம்.ஜி.ஆரை சந்தித்து, 'கதாநாயகுடு' என்ற அப்படத்தின் கதைக் கருவைச் சொன்னேன். தன்னிடம் வேறு யாரோகூட இந்தப் படத்தைப் பற்றிச் சொன்னதாகச் சொன்ன அவர்... "ஏற்பாடு பண்ணலாம்" எனச் சொன்னார். சில நாட்கள் கழித்து பத்திரிகையில் சேதி பார்த்தேன். நாகிரெட்டியார் தயாரிப்பில் எம்.ஜி.ஆர். -ஜெயலலிதா நடிக்கும் 'நம் நாடு'. இது 'கதாநாயகுடு' படத்தின் ரீ-மேக் என்று. படம் சூப்பர் ஹிட். அதேபோல் என்.டி.ஆர். சொந்தப் படம்... 'மதுரை வீரன்' இயக்குநர் டி.யோகானந்த் இயக்கத்தில் தெலுங்கில் வெள்ளிவிழா கண்ட படம். படத்தின் பெயர் 'உம்மிடி குடும்பம்'. எனக்கு மிகவும் பிடித்த குடும்பப் படம். எம்.ஜி.ஆர். நடித்தால் சூப்பரா வரும் என ஏவி.எம்.மில் வாங்க வைத்தனர். தமிழ் திரைக்கதை -வசனத்தை நான் எழுதினேன். ஆனால் படம் டேக்ஆஃப் ஆகவில்லை.

ஒருசில வருடங்கள் முன்னால் ராஜ்கிரண், இன்னும் பல பிரபலங்கள் நடிக்க 'எம்.ஜி.ஆர். இல்லம்' என்ற ஒரு படத்துக்கு ரிக்கார்டிங்கோடு பூஜை போட்டேன். எம்.எஸ்.வி. தொடர்ந்து ஏழு அருமையான பாடல்களை ஒலிப்பதிவு செய்து தந்தார். ஒருசில அரசியல் காரணங்களுக்காக அது தொடர முடியாத நிலை ஏற்பட்டது. ஏகப்பட்ட பணம் முடங்கியது. ஆனால் இந்தக் கதையை எப்ப எடுத்தாலும் எம்.ஜி.ஆர். கட்சிக்கு ஆதரவை திருப்பிவிடும் என்பது நிஜம்.

**(திரை விரியும்...)**

படம் உதவி: ஞானம்

www.nakkheeran.in

## எதுவும் தவறில்லை என முடிவெடுத்தவர்களிடம் சரியானதைக் கொண்டு செல்வது நேர விரயம்!

(16-ம் பக்க தொடர்ச்சி)

லட்சம் ரூபாய் வேணும்னு தங்கைய குடும்பமே டார்ச்சர் பண்ணாங்க. அடிக்கடி சண்டை வரும். தங்கைய அடிப்பாங்க. எல்லாத்தையும் எங்கம்மாகிட்ட சொல்லி அழுவா. எம்.பி.ஏ. முடிச்சிட்டு சதர்லேண்டு ஐ.டி. கம்பெனில வேலைசெஞ்சா. மாதச் சம்பளத்தையும் அவனே வாங்கிடுவான். அவ ஏ.டி.எம். கார்டு அவன் கிட்டதான் இருக்கும்.

2024, டிசம்பர் 29-ஆம் தேதி தங்கைக்கு பெண் குழந்தை பிறந்துச்சு. குழந்தைக்கு சீர்வரிசை கேட்க, 4 சவரன் தங்கநகை, வெள்ளிப் பொருட்கள், ரெண்டு லட்சம் பணமும் கொடுத்தோம். அது பத்தலைனு ராஜ்மோகன், மைத்துனர் கார்த்திக்ராஜா, மாமியார் சசிகலா, மாமனார் திருஞானம் என் தங்கைய அடிச்சிருக்காங்க. மறுநாள் அதிகாலை 3:45 மணிக்கு கார்த்திக்ராஜா போன்பண்ணி ஸ்டெபிக்கு உடம்பு சரியில்லன்னு கூப்பிட்டார். அங்க ஸ்டெபி பேச்சுமூச்சில்லாம கிடந்தா. உடல் முழுக்க காயம்... வாய்ல நுரை வந்திருந்துச்சு. அருகிலிருக்கும் அன்னை மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றோம். டாக்டர் அவள் ஏற்கனவே இறந்துட்டதா சொன்னாங்க.

ராஜ்மோகனிடம் என் தங்கைக்கு என்ன நடந்துச்சுன்னு பலமுறை கேட்டும் சரியா பதில் சொல்லலை. தங்கை சாவில் மர்மம் உள்ளது என்று புகாரளித்தும் மணிமங்கலம் போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. பெயரளவில் எஃப்.ஐ.ஆர். போட்டு பிரேத பரிசோதனை முடித்து தங்கை உடலை எங்களிடம் ஒப்படைத்தனர். ராஜ்மோகன் குடும்பத்தினரிடம் கேட்டபோது விஷமருந்தியதாகக் கூறினார்கள். அவள் ஒருபோதும் தற்கொலை செய்யும் கோழையல்ல. அவள் சாவில் மர்மம் உள்ளது என்று தாம்பரம் கமிஷனரிடம் புகாரளித்தும் பலனில்லை" என்றார் கண்ணீருடன்.

மணிமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் ராமதாஸைத் தொடர்பு கொண்டோம். சரியான பதில் தராத காரணத்தால், ஆய்வாளர் டெல்லியைத் தொடர்புகொண்டோம். அவரோ, "சம்பவம் நடந்தபோது கடந்த மாதம் இங்கு பணியிலிருந்த ஆய்வாளர் அசோக்கைக் கேளுங்க" என்றார். அவரோ, 'இந்த கேஸ் நான் பார்க்கவில்லை' என்று முடித்துக்கொண்டார். கடைசியாக மணிமங்கலம் உதவி ஆணையர் சுந்தரைத் தொடர்புகொண்டோம். அவரும் மழுப்பலாகப் பதிலளித்தார்.


உதவி ஆணையர் சுந்தர்


டாக்டர் செல்வக்குமார்

எங்கோ தவறு நடக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு ஸ்டெபியின் பிரேத பரிசோதனை அறிக்கையை எடுத்துக் கொண்டு சட்டம் சார்ந்த மருத்துவத்துறை மருத்துவரான டாக்டர் செல்வக்குமாரிடம் கேட்டோம். "ஸ்டெபியின் கழுத்தில் ஒன்பது இடத்தில் நகக் கீறல்கள், கழுத்தை கையால் இறுக்கியதற்கான பிறை நிலா போன்ற ரணம், இடது கழுத்தில் கன்றிய காயம், இடது முன்னங்கையில் 3 பெரிய சிராய்ப்பு, முன்கழுத்து காலர் எலும்பு சேருமிடத்தில் எலும்பு முறிவு, இடதுபுறம் விலா எலும்பு நான்கு உடைந்துள்ளது, இது இதயத்தைக் காயப்படுத்தியுள்ளது. தலைமேல் வலப்பக்கத்தில் பலத்த கன்றிய காயம், (சுவரில் பலமாக முட்டியிருக்கலாம்) மூளை பலத்த சேதமடைந்துள்ளது. கழுத்தை நெறித்து கொலை நடந்திருக்கலாம், ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம். இது கொலைதான். அதற்கான எல்லாக்கூறுகளும் உள்ளது" என்றார்.

ஆனால் தாம்பரம் போலீஸோ அலட்சியமாக உள்ளது. 'பிரேத பரிசோதனை அறிக்கை கொலைதான் என்று கூறியிருந்தும், ஏன் குற்றவாளிகள் உடனே கைதுசெய்யப்படவில்லை? ஆர்.டி.ஓ. விசாரணை ஒருமாத காலம் கடந்து நடத்தப்படுவதேன்? கொலை நடந்த வீட்டுச் சாவியை சந்தேகத்துக்குரியவர்களிடமே போலீஸார் வழங்கியது ஏன்? கொலைச் சம்பவம் நடந்த வீட்டிலிருந்த நான்கு பேரில் ஸ்டெபியின் கணவர் ராஜ்மோகன் மட்டும் கைது செய்யப்பட்டது ஏன்?'

பல கேள்விகள் இந்த விவகாரத்தில் விடையில்லாமலே உள்ளது.

**-அரவிந்த்**

NKN140625

# பிரதமரை வரவேற்ற ஜல்சா சிவாச்சாரியார் கைது!



தியாகராஜன் பிரதமரை வரவேற்றபோது...

பிரதமருக்கு பூரணகும்ப மரியாதை செய்த கோவில் சிவாச்சாரியார், கோவிலுக்கு தெய்வப்பணி செய்யவந்த பெண்ணிடம் காதல் வார்த்தை பேசி கோவிலுக்குள்ளேயே ஜல்சா செய்ததாக எழுந்த பாலியல் புகார் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரையடுத்த ரெட்டித்தோப்பு பகுதியை சேர்ந்தவர் 25 வயதான சித்ரா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). ஆம்பூரில் பிரபலமான நாகநாதசுவாமி கோவிலில் உழவாரப்பணி (தூய்மைப் பணி) செய்யச் சென்றுள்ளார். அதே ஆலயத்தில் தலைமை அர்ச்சகராக பணியாற்றுபவர் தியாகராஜன் சிவாச்சாரியார். அவர்மீது அந்தப்பெண் பரபரப்பான குற்றச்சாட்டு வைத்திருக்கிறார். அதில், ‘என்னை திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லி பலமுறை என்னுடன் இருந்தார். எனக்கு சென்னையிலுள்ள பிரபல கோவிலில் வேலை வாங்கித் தந்து அங்கேயே அனுப்பிவைக்கிறேன் எனச்சொல்லி நெருக்கமாகப் பழகினார். இப்போது என்னை திருமணம் செய்துகொள்ள மறுக்கிறார்’ எனக் கடந்த ஜூன் 4ஆம் தேதி திருப்பத்தூர் மாவட்ட எஸ்.பி. ஸ்ரேயகுப்தாவிடம் நேரடியாகச்சென்று புகார் தந்தார். அந்த புகாரின் அடிப்படையில் ஆம்பூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் தியாகராஜன் மீது மூன்று பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறை தரப்பில் இதுகுறித்து விசாரித்தபோது, “கடந்த 2024, மார்ச் 24ஆம் தேதி, கோவிலில் வேலை செய்துகொண்டிருந்தேன். ஒருநாள் என்னிடம், கோவில் ஊழியர்களுக்கு எனது வீட்டில் உணவு செய்து வைக்கப்பட்டுள்ளது, போய் எடுத்துவா எனச் சொன்னார். நானும் சென்றேன், அப்போது வீட்டில்

NKW140625



இரண்டாம் மனைவியுடன் தியாகராஜன்



கைதான தியாகராஜன் சிவாச்சாரியார்

www.nakkheeran.in

## நல்லவனுக்குத் தெரியாத வில்லத்தனம் இங்கு எதுவும் இல்லை -நல்லவன் என்னும் பெயருக்குள் மறைத்திருப்பவன்தான் மிகவும் ஆபத்தானவன்!

வாட்ஸப்பில் காம லீலை




யாரும் இல்லை. திடீரென வீட்டுக்கு வந்தவர் என்னை வீட்டுக்குள் அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லி பாலியல் உறவு கொண்டார். கடந்த ஓராண்டாக இப்படி பலமுறை செய்துள்ளார் எனப் புகாரில் குறிப்பிட்டுள்ளார். அதோடு அந்த தியாகராஜன் இந்த பெண்ணுடன் முகநூல், வாட்ஸப் வழியாக சாட் செய்ததற்கான ஆதாரங்களும் உள்ளது. அதனால் தான் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது" என்றார்கள்.

இதுகுறித்து நகரின் முக்கிய பிரமுகர்களிடம் விசாரித்தபோது, "இரண்டு பெண்கள் இந்த தியாகராஜன் மீது புகார் சொன்னார்கள். அதில் ஒரு பெண்ணிடம் நகரின் சில முக்கிய பிரமுகர்கள் கட்டப்பஞ்சாயத்து பேசி அந்த தியாகராஜனிடமிருந்து 4 லட்ச ரூபாய் பணம் வாங்கி அந்த பெண்ணுக்கு தந்து சமாதானம் செய்துவிட்டார்கள். மற்றொரு பெண்ணிடமும் பேரம் பேசப்பட்டது, அது படியவில்லை. அந்த பெண் ஆம்பூர் காவல் நிலையத்தில் புகார் தந்தால் நியாயம் கிடைக்காது என எஸ்.பி.யை சந்தித்து புகார் தந்தார், அதனாலேயே எப்.ஐ.ஆர். போடப்பட்டு தியாகராஜனிடம் விசாரிக்கப்பட்டது. இந்த தியாகராஜன் லேசுப்பட்ட ஆளில்லை. கோவிலையே தனது அந்தப்புரமாக மாற்றியவன். அவனுக்கு திருமணமாகி குழந்தையுள்ளது. இரண்டு ஆண்டுக்கு முன்பு கோவிலுக்கு வந்த ஒரு பெண்ணுக்கு (மாற்று சாதி) காதல் வலை வீசி, அந்த பெண்ணுடன் கோவிலுக்குள்ளேயே ஜல்சாவில் ஈடுபட்டு அந்த பெண் கர்ப்பமாகி, குழந்தையும் பெற்றுவிட்டார். அந்த பெண்ணுக்கு பணம் பேரம் பேசினார்கள். அந்த பெண், தாலி கட்டு எனச் சொன்னதால் வேறுவழியில்லாமல் இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்டு வாணியம்பாடியில் குடித்தனம் வைத்துள்ளான். அதன்பின்பும் அவனது லீலை குறையவில்லை. கோவிலுக்கு பணி செய்ய வருபவர்கள், சுவாமி கும்பிடவரும் பக்தைகளுக்கு காதல் வலை வீசியபடியே இருப்பான். அதில்தான் கோவில் உழவாரப்பணி செய்ய வந்திருந்த இளம்பெண்களிடம் தனது காதல் வலையை வீசியுள்ளான். இரவெல்லாம் அவரிடம் செக்ஸ் சாட் செய்துள்ளான். அந்த பெண்ணுடன் அவன் பேசிய சாட்களை பாருங்கள் எவ்வளவு காமச்சாமியராக இருந்திருக்கான் என்பது உங்களுக்கே புரியும்" எனச் சொல்லி அந்த ஸ்கிரீன்ஷாட்களை நமக்குத் தந்தனர்.

இந்த பாலியல் புகாரை விசாரிக்க திருப்பத்தூர் டி.எஸ்.பி. சௌமியாவை சிறப்பு அதிகாரியாக நியமித்துள்ளார் எஸ்.பி. ஜூன் 6 மற்றும் 7ஆம் தேதிகளில் புகார்தாரர், கோவில் ஊழியர்கள், அதிகாரி, தியாகராஜனை அழைத்து விசாரணை செய்துள்ளனர்.

கோவில் இ.ஓ.வை நாம் தொடர்பு கொண்டபோது அவர் நமது லைனை எடுக்கவில்லை, குறுஞ்செய்தி அனுப்பியும் பதில் தரவில்லை. கோவில் ஊழியர்களோ, சிவாச்சாரியார் தவறு செய்கிறார் என்பது இ.ஓ.வுக்கு நன்றாக தெரியும். அதுவும் கோவிலுக்குள்ளேயே தப்பு செய்தார் என்பது தெரிந்தும் அவர் கண்டுகொள்ளவில்லை. அதனாலேயே பாதிக்கப்பட்ட பெண் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் தந்தார். இந்த பெண் மட்டுமல்ல, இவன் ஆசை வார்த்தைகளில் மயங்கி ஏமாந்துபோன இன்னும் சில பெண்களும் இருக்கிறார்கள்" என பகீர் கிளப்புகிறார்கள்.

சிலமாதங்களுக்கு முன்பு பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றபோது, பாரிசில் பிரதமருக்கு பூர்ண கும்ப மரியாதை செய்து வரவேற்பளிக்கப்பட்டது. அப்படி வரவேற்பை தந்தவர் பாலியல் புகாரில் சிக்கியுள்ள இந்த தியாகராஜன்தான். இவனது அப்பா அகோரமூர்த்தி 25 வருடங்களுக்கு முன்பு இதே ஆம்பூர் கோவிலில் சிவாச்சாரியராக இருந்தபோது, ஒருபெண்ணிடம் பாலியல் சேட்டை செய்ததால் இங்கிருந்து மக்களால் அடித்துத் துரத்தப்பட்டார். அப்படி துரத்தப்பட்டவர் இப்போது பாரீசில் உள்ள சிவன் கோவிலில் அர்ச்சகராக உள்ளார். மோடியை வரவேற்பு தர ஏற்பாடு செய்யப்பட்டபோது, மகனை பாரிஸ் வரவைத்து வரவேற்பு தரச்செய்தார் என்கிறார்கள். இந்நிலையில் புதுச்சேரியில் பதுங்கியிருந்த தியாகராஜனை ஜூன் 9ஆம் தேதி விடியற்காலை கைது செய்துள்ளது போலீஸ்.

-து.ராஜா

NKN14062025

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில், மாவட்ட கல்வி அலுவலர் அலுவக வளாகத்திலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுற்று வட்டார கிராமங்களிலிருந்து படித்த ஆயிரக்கணக்கானோர், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகளிலும், தொழிலதிபர்களாகவும் உள்ளனர். இந்த பள்ளியை மாதிரிப் பள்ளியாக மாற்றி தரம் உயர்த்திய தமிழ்நாடு அரசு, அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. தேவையான ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தான் இந்த வருடம் +2 பொதுத்தேர்வில் 58% பேர் மட்டுமே தேர்ச்சி பெற்று மாவட்டத்திலேயே கடைசி இடத்திலிருந்தது இந்த பள்ளி. இதில் 107 மாணவர்கள் பெயிலாகி இருந்தனர். இதேபோல, 10ஆம் வகுப்பில் 107 மாணவர்களில் 36 மாணவர்கள் பெயிலாகி 66% பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றனர், +1 பொதுத் தேர்வில் 59% மாணவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றிருந்தனர். இதனால் பள்ளி நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும், ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறந்தாங்கி வர்த்தக கழகத்தினர், மாவட்ட ஆட்சியர், முதன்மைக் கல்வி அலுவலரிடம் மனு கொடுத்துள்ளனர்.

இதேபோல இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் செங்கோடன், அறந்தாங்கி, புதுக்கோட்டை உள்ளிட்ட பல அரசுப் பள்ளிகளின் கல்வித்தரம் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டார்.

பொதுத்தேர்வில் அரசு மாதிரிப் பள்ளியின் மோசமான தேர்ச்சி குறித்து நக்கீரன் இணையத்தில் செய்தி வெளியிடப்பட்டிருந்த நிலையில், அறந்தாங்கியை சேர்ந்த தன்னார்வலர்கள்,



அறந்தாங்கி அரசு மாதிரிப் பள்ளி


மாதிரி பள்ளியில் எம்.எல்.ஏ. மீட்டிங்


கலெக்டர் மெர்சி ரம்யா ஆய்வின்போது


முதன்மை கல்வி அலுவலரிடம் மனு

www.nakkheeran.in

# அரசு மாதிரிப் பள்ளி மீது அதிரடி நடவடிக்கை! நக்கீரன் செய்தி எதிரொலி!

பெற்றோர்கள், பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்களுடன் கலந்தாலோசனை செய்தனர். அப்போது தலைமையாசிரியரோ பாட ஆசிரியர்கள் மீதும், ஆசிரியர்களோ, மாணவர்கள் சரியில்லை, பள்ளிக்கு வருவதில்லையென்றும் குற்றம்சாட்டினர். மேலும், ஜூன் மாதத் துணைத்தேர்வில் அனைவரையும் தேர்ச்சிபெற வைப்பதாக உறுதி கூறினார்கள். ஆனால், ஆசிரியர்கள் சொன்ன காரணங்களை ஏற்க முடியவில்லை. ஏராளமான மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்பதை ஏன் எஸ்.எம்.சி., பி.டி.ஏ., கல்வித்துறை அதிகாரிகள், பெற்றோர்கள் கவனத்திற்கு கொண்டுசென்று மாணவர்களை பள்ளிக்கு அழைத்துவர முயற்சிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. அதேபோல், ஆசிரியர்கள் மத்தியில் ஜாதிப்பிரச்சனையும் அதிகமிருப்பதாக மாணவர்கள் சொல்வதாக தன்னார்வலர்களும், பெற்றோர்களும் கூறினர். இனிவரும் காலங்களில் இப்பிரச்சனைகளை சரிசெய்ய வேண்டுமென்றனர்.

இந்நிலையில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் பள்ளிக்குச் சென்று, அறந்தாங்கி மாவட்டக் கல்வி அலுவலர் ஜெயந்தி, தலைமை ஆசிரியர் சேகர் மற்றும் ஆசிரியர்களிடம் தேர்வு முடிவுகள் குறித்து கேள்வியெழுப்பினார். அப்போது, பேசிய சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், ''அறந்தாங்கி மாடல் ஸ்கூல் புதுக்கோட்டை மாவட்டத்திலேயே கடைசி இடத்திற்கு வருதுன்னா எப்படி ஏற்க முடியும்? மாணவர்களை குறை சொல்றதை நிறுத்திட்டு, அதை சரிசெய்வதுதான் மாதிரிப்பள்ளி. சென்னையிலுள்ள அரசுப் பள்ளிகளில் குறைந்தது 90% தேர்ச்சியை கொடுக்கிறார்கள். இனிவரும் காலங்களில் குறைகளை சரிசெய்ய ஆசிரியர்களும் தயாராக வேண்டும்'' என்றார் வேதனையோடு.

இதுகுறித்து பெற்றோர்கள் நம்மிடம், "கடந்த ஆண்டு பள்ளிக்குவந்த அப்போதைய மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா, குப்பை குவியல்களாகக் கிடந்த பள்ளியின் நிலையைப் பார்த்து, பயங்கர கோபமாகி தலைமை ஆசிரியரை கடிந்துகொண்டார். உள்கட்டமைப்பு மட்டுமல்ல, மாணவர்களின் வாசிப்புத்திறனும் மோசமாக இருப்பதைப் பார்த்து எல்லாத்தையும் மாற்றுங்கள் என்று எச்சரித்துச் சென்றார். ஆனால் அதை யாருமே கண்டுக்கல. அதன் பலன்தான் இன்று இப்பள்ளி தலைகுனிந்து நிற்கிறது" என்றனர்.


NKN140625

இந்நிலையில், மாவட்ட கல்வி நிர்வாகம் நடத்திய ஆய்வில், பள்ளியில் மாணவர் நலனுக்கு எதிராக செயல்பட்ட சில ஆசிரியர்கள் அடையாளம் காணப்பட்டு கல்வித்துறை செயலாளர் வரை அறிக்கை கொடுத்திருந்த நிலையில் முதற்கட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இதில், தொழிற்கல்வி ஆசிரியர் (விவசாயம்) ஸ்ரீரஞ்சித் குமார் மது போதையில் பள்ளிக்கு வராமலும், பாடம் நடத்தாமல் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்ததையடுத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம் அவரை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மாணவர்கள் நலனில் அக்கறை இல்லாமல் செயல்பட்டதாக முதுநிலை ஆசிரியர்கள் மு.சி.பாஸ்கர் -கட்டுமாவடி, அந்தோணிராஜ் -வெண்ணாவல்குடி, பாலச்சந்தர் -அத்தாணி, பட்டதாரி ஆசிரியர்கள் இளையராஜா -கீரமங்கலம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மூர்த்தி, நெடுவாசல், ரவி, கிருஷ்ணாசிப்பட்டினம், ஜெரோம், சுப்பிரமணியபுரம் -ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என 7 ஆசிரியர்களை வெவ்வேறு ஊர்களுக்கு பணியிட மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் இந்த உத்தரவு ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும், பெற்றோர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது. இந்த நடவடிக்கை தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள் நலனுக்கு எதிராக செயல்படும் ஆசிரியர்களுக்கு பாடமாக அமையும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

**-இரா.பகத்சிங்**



**இதுவரை நடந்ததை யோசிப்பதை விட; இனி எப்படி நடக்கவேண்டும் என யோசிப்பவர்களே வாழத் தெரிந்தவர்கள்!**

# (56) உன்னாவிரதம்!

**சிறைச்சாலையின் நீண்ட பயணத்தில் தோழர் நல்லகண்ணு மதிப்பீடுகள் சிலவற்றை உருவாக்கி வைத்திருந்தார். இதை நான் அறிந்து கொண்டதில் ஒருவிதமான தெளிவை பெற்றுக் கொண்டேன். இந்த தெளிவு, வாழ்க்கையில் பலவற்றை புரிந்துகொள்ள, எனக்கு வசதியை செய்து கொடுத்தது. ஆயுதம் தாங்கிப் போராட்டங்களை முன்னெடுத்த காலத்தில் நிகழ்ந்த பல நிகழ்வுகளை அனுபவ அடிப்படையில் இன்று ஆராய்ந்து பார்ப்பது அவசியமானதாகும். இதை நன்றாக புரிந்துகொள்ளும் வாய்ப்பு, இதன்மூலம் எனக்கு கிடைத்தது.**




**இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் கல்கத்தா மாநாட்டு தீர்மானம் நேரு அரசாங்கத்தை தூக்கி எறியும்** தருணம் வந்துவிட்டதாக அறிவித்திருந்தது. ரஷியாவில் லெனின் தலைமையில் ஏற்பட்ட மாற்றத்தைப் போல, சீனத்தில் மாவோ தலைமையில் ஏற்பட்ட மாற்றத்தைப் போல இந்தியாவிலும் பூர்ஷ்வாக்களின் ஆட்சியை தூக்கி எறிய முடியும் என்று தீர்மானித்தது. இதை உண்மை என்று கட்சி உறுப்பினர்களும் தீவிர ஆதரவாளர்களும் நம்பிக்கை கொள்வதற்கான புறச்சூழலும் இருந்தது. மிகவிரைவில் ஆட்சியைக் கைப்பற்றப்போகிறோம் என்ற கற்பனை அனைவருக்கும் வந்துவிட்டது. சிறையில் அடைபட்டு, அடக்குமுறையை சந்தித்த தோழர்களிடமும் இது கொஞ்சம் கூடுதலாகவே இருந்தது. இந்தியச் சூழலில் அது எத்தனை சிறுபிள்ளைத்தனமான முடிவு என்பதை இப்பொழுது யோசித்துப் பார்க்கிறேன் என்று அடிக்கடி தோழர் நல்லகண்ணு சொல்வதை நானறிவேன்.

.எளிய மக்களின் விடுதலையை ஆயுதப் புரட்சியின் மூலம் முன்னெடுக்கும் வாய்ப்பு இருந்தால், அதைப் பயன்படுத்துவதில் தவறில்லை. இதில் உண்மை நிலவரத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வது அவசியமானது. புரட்சியில் வெற்றிபெற வேண்டுமென்றால் எல்லையோர நாடுகளில் ஒன்று, இந்த புரட்சியை ஆதரிக்க வேண்டும். இதைப் போல, அந்த புரட்சியின் முன்னெடுப்புகளை எல்லையோரப் பகுதிகளில் தொடங்க வேண்டும். தென்னிந்தியாவின் தெலுங்கானா, மலையாள நாட்டின் புன்னபுரா, வயலார், மேற்குவங்கத்தின் தெபாக்க ஆகிய இடங்களில் ஆயுதப் போராட்டத்தை தொடங்கியிருந்தனர். இவை ஆயுத எல்லை யோர மாநிலங்கள் இல்லை. தவிரவும் ரஷ்யா, சீன ஆகிய கம்யூனிஸ்டு நாடுகளுடன் ஆயுத உதவிபெறும் ஒப்பந்தங்கள் எதுவும் இல்லை. இதை எல்லாம் கணக்கில் எடுக்காமல் அவசரம் அவசரமாக கல்கத்தா மாநாடு இந்த தீர்.மானத்தை எடுத்து விட்டது என்று தோழர் நல்லகண்ணு கூறுவார்.

இந்தியா முழுவதிலும் ஆயுதப் போராட்டத்தை தொடங்கியிருந்தாலும் எந்த இடத்திலும் நிலைபிடித்து நிற்க முடியவில்லை. தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தை புரட்சியின் சாதனை என்று கூற முடியும். ஆனால் இந்த வெற்றியை இந்திய வெற்றியாகக் கருத முடியவில்லை. பல மாநிலங்களில் இந்த முயற்சிகள் ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டன. இது பற்றிய தெளிவான கருதுகோள்கள் தோழர் நல்லகண்ணு விடம் இருந்தது.

www.nakkheeran.in




எதிலும் நம்பிக்கையில்லாத ஒருவரிடம், நற்பெயர் பெற்றிட ஆசைப்பட்டால்... கிடைப்பது தோல்விதான்!



ஆனால் அன்று மிக விரைவில் ஆட்சியைப் பிடித்துவிடுவோம், சிறை அதிகாரம் உள்ளிட்ட அனைத்து ஆட்சி அதிகாரமும் நம் கைக்கு வந்துவிடப்போகிறது என்ற எண்ணம் பரவலாக எல்லோருக்கும் வந்துவிட்டது என்றார். இந்த நம்பிக்கைதான் அன்றைய சிறை வாழ்க்கையில் உந்துசக்தியாக அமைந்து அனைவரையும் இயக்கிக்கொண்டிருந்தது. சிறையிலும், தலைமறைவு தளங்களிலும் இதற்கான தத்துவங்களின் மூலம் தலைவர்கள் விளக்கங்களைத் தந்தார்கள். அரசியல் வகுப்புகள் இந்த நம்பிக்கையை கூடுதலாக்குவதற்காகவே நடத்தப்பட்டன.

ஒருவிதமான எழுச்சி இதனால் ஏற்பட்டது. சிறைச்சாலையில் முதலில் சில அடிப்படையான பிரச்சனைகளை முன்வைத்தனர். பின்னர் அது கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் போராட்டமாக மாறியது. இதில் கம்யூனிஸ்டுகளை கறுப்பு குல்லாக்களை நடத்துவதைப் போல நடத்தக்கூடாது என்பது முக்கியமானதாகியது. இதுவும் ஒரு உண்ணாவிரதப் போராட்டமாக தொடங்கியது. கம்யூனிஸ்டுகள் சிறைச்சாலைகளில் நடத்திய போராட்டங்களைப் பற்றிய பல்வேறு குறிப்புகள் கிடைத்துள்ளன. நல்லகண்ணு உள்ளிட்ட பலரும் சிறைச்சாலையில் உடல்நலம் பாதிக்கப்பட்டதற்கு இந்த உண்ணாவிரதப் போராட்டங்களும் ஒரு காரணமாகும். பத்து நாள் முதல் 20 நாட்கள் வரை மிகவும் சர்வ சாதாரணமாக உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள்.

உண்ணாவிரதத்தைத் தொடங்குவதற்கு முன்னர் சில தயாரிப்புகள் உண்டு என்கிறார் நல்லகண்ணு. உண்ணாவிரதம் இருக்க, உணவுக் குடலை தயார் செய்யவேண்டும். வயிற்றின் குடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மலக்குடலிலிருந்து வெளியேற வேண்டியவை அங்கேயே இருந்தால் இது ஆபத்தில் முடிந்துவிடும். இது பற்றிய முன்அனுபவம் கொண்ட கம்யூனிஸ்டுகள் ஒவ்வொரு சிறையிலும் இருந்தார்கள். இவர்கள் புதியவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். முதலில் எனிமா கொடுத்து வயிற்றை சுத்தம் செய்வார்கள். இதில் கம்யூனிஸ்டுகள் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்தார்கள் என்பதற்கு பல ஆதாரங்களை கூற



–சி.மகேந்திரன்

www.nakkheeran.in

Vol.38
Issue No:17
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : nakkheeran2003@yahoo.com
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

**முதன்மை பொறுப்பாசிரியர்: மாவலி**
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், இரா.த.சக்திவேல், ராம்கி
**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :**
க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன்,
எம்.செந்தில்குமார், தா.மகாராஜன்
**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்
**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** சக்திவேல், எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:**
ச.ராஜேந்திரன்
**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** சி.பிரான்சிஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**சந்தா பிரிவு உதவியாளர்:** பார்த்திபன்
**முதன்மை காசாளர் :** பி.என்.ஆனந்த்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் :** து.கண்ணன்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன், சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :** ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம், யூனுஸ், பாண்டியன்

Legal Manager : **பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**
**Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch**

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.

முடியும். நோயாளிகளையும் உடல் பலவீனமானவர்களையும் உண்ணாவிரதம் இருக்க இவர்கள் அனுமதிப்பதில்லை.

உண்ணாவிரதத்தில், சபலமற்ற, எதிலும் உறுதிகொண்ட மனம் வேண்டும். இன்று விளம்பரத்தின் மூலம் பிரச்சாரம் செய்வதற்கு அச்சு ஊடகம், காட்சி ஊடகம், சமூக ஊடகங்கள் என்று பல தளங்கள் இருக்கின்றன. அன்று கம்யூனிஸ்டுகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து, அதன்மூலம் தங்கள் கொள்கை என்ன என்பதை வெளியுலகத்திற்கு தெரிவித்து வந்தனர். இதை தங்களின் கொள்கைகளை எடுத்துச் செல்லும் பிரச்சார முறையாக்கிக்கொண்டார்கள். இதில் உண்ணாவிரதம் பிரதான இடத்திலிருந்தது. இவை, சிறைக்கைதிகள் அனைவரையும் கம்யூனிஸ்டுகள் மீது அனுதாபம் கொள்ள வைத்து. அதன்மூலம் கைதிகளிடம் மேலான சிந்தனைகள் தோற்றம் காண வழிவகுத்தது உண்ணாவிரதம். இதன்மூலம் கீழ்த்தரமான சிந்தனைகளில் முடக்கி வைத்திருந்த சிறையுலகத்தை புதிய விழிப்புணர்வில் விழிக்க வைத்தது.

கம்யூனிஸ்டுகளை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டும் என்பது உண்ணாவிரதப் போராட்டத்தின் மையக் கோரிக்கையாக மாறியது. பகத்சிங் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்து அனைத்தும் இதை மையப்படுத்தியே இருந்தது. இந்திய சிறைச்சாலைகளில் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடந்தன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இந்தியாவை ஆட்சி செய்தது. ஆனால் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சி பிரிட்டனில், மார்னிங் ஸ்டார் என்ற தனது அதிகாரப்பூர்வமான பத்திரிகையில், இந்தக் கொடுமைகள் அனைத்தையும் விளக்கும் தங்கள் தீவிர எழுத்துக்களால் பெரும் பரபரப்பை உருவாக்கியது. இதை காலனி நாடுகளின் போராடும் சக்திகளிடம் கொண்டு போய் சேர்த்தது. இதற்கான ஆதாரப்பூர்வமான கேள்விகளுக்கு பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தால் பதிலளிக்க முடியவில்லை.

தோழர் நல்லகண்ணு மூலம் நான் அறிந்துகொண்ட, தமிழக சிறைகளின் உண்ணாவிரதப் போராட்டங்கள், என்னைப் பெரிதும் திகைக்க வைத்தது. சமுதாயத்தின் பொதுவெளியில் அறிந்துகொள்ள முடியாத பல்வேறு தகவல்களை என்னால் அதில் புரிந்துகொள்ள முடிந்தது. முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் மிகுந்த வஞ்சகம் நிறைந்தவர்கள். போராடியவர்கள் சிந்திய பச்சை ரத்தத்தை இவர்களால் மிகவும் சுலபமாக மூடி மறைத்துவிட முடிகிறது. அன்று, அந்த சிறை முழுவதும் ரத்த வாடை. அதை கவனமாக இந்த வரலாற்று ஆசிரியர்கள் மூடி மறைத்து விட்டார்கள். அது பற்றிய பல விபரங்களை தோழர் நல்லகண்ணு என்னிடம் கூறியிருக்கிறார். அது தியாகத்தின் வலிமை எத்தகையது என்பதை எனக்கு மேலும் உணர்த்துகிறது.

**(தொடரும்)**

NKN140625

ராங்-கால்!



# தி.மு.க. கூட்டணி கலகலக்கிறதா?

“ஹலோ தலைவரே, தி.மு.க. கூட்டணி கலகலக்கிறதாமே...”

“ஆமாம்ப்பா. தி.மு.க. கூட்டணியிலிருந்து தங்கள் கூட்டணிக்கு ஒரு கட்சி வரும்னு மத்திய அமைச்சர் எல்.முருகன் சொல்லியிருக்காரே...! அதோடு அவர் நிறுத்தாமல், அந்தக் கட்சி வாஜ்பாய் காலத்தில் தங்கள் கூட்டணியில் இருந்த கட்சி என்றும், அக்கட்சியுடன் தற்போது பேச்சுவார்த்தை நடந்துவருவதாகவும் சொல்லி, பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறாரே.”

“அதப்பத்தி சொல்லுப்பா.”

“ஆமாங்க தலைவரே... இதன்படி அவர் ம.தி.மு.க.வைத்தான் சொல்லியிருக்கிறார். ம.தி.மு.க.வைப் பொறுத்தவரை வைகோவின் மகன் துரை வைகோ, தி.மு.க. கூட்டணியில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றிருந்தாலும், அவர் தி.மு.க. சின்னத்தில் நிற்காமல், தீப்பெட்டி சின்னத்தில் நின்று வெற்றி பெற்றதால், தி.மு.க.வின் உத்தரவுகளுக்கு அவர் கட்டுப்படத் தேவையில்லை என்கிற நிலையிலிருக்கிறார். இந்த துரையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுபோல்தான் எல்.முருகன் சொல்லியிருக்கிறார். இதுகுறித்து ம.தி.மு.க. தரப்போ, வைகோவுக்கு தி.மு.க. ராஜ்யசபா சீட்டைக் கொடுக்கவில்லையே என்கிற ஆதங்கம் எங்களுக்கு இருந்தாலும், தி.மு.க. கூட்டணியை விட்டுப் போகும் அளவுக்கு நாங்கள் முரண்படவில்லை என்கிறது. இதேபோல், சி.பி.எம்., விடுதலைச் சிறுத்தைகள், காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் தி.மு.க.விடம் இந்தமுறை அதிக சீட்டை எதிர்பார்க்கின்றன. எனினும், இப்படி எதிர்பார்ப்பது எங்களுக்குள் நடக்கும் ஜனநாயகப்பூர்வமான கோரிக்கைதான், அதற்காக கூட்டணியை விட்டு நாங்கள் விலகுவோம் என்று எதிர்பார்க்கவேண்டாம் என்று அழுத்தமாகவே சொல்கின்றன.”

“ஐ.ஆர்.எஸ். அதிகாரி அருண்ராஜ், நடிகர் விஜய்யின் த.வெ.க.வில் சேர்ந்திருக்கிறாரே?”

“முன்னாள் ஐ.ஆர்.எஸ். அதிகாரியான அருண்ராஜ், தற்போது நடிகர் விஜய்யின் த.வெ.க. கட்சியில் சேர்ந்திருக்கிறார். இவருக்கு கொள்கை பரப்புச் செயலாளர் பதவியைத் தூக்கிக் கொடுத்திருக்கிறார் விஜய். இவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு சில உதாரணங்கள். பண மதிப்பிழப்பு அமல்படுத்தப்பட்ட நேரத்தில் சேகர்ரெட்டியைக் குறிவைத்து, புத்தம் புதிய 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் வைக்கப்பட்டிருந்த கண்டெய்னரை இவர்தான் மடக்கினார். மேலும், சசிகலாவின் 1100 கோடி

NKN140625



எல்.முருகன்

www.nakkheeran.in

திருவள்ளூரில் அரசு மருத்துவமனை அருகே முட்புதரில் வீசப்பட்ட பச்சிளம் குழந்தை -போலீசார் விசாரணை



விஜய்யுடன் அருண்ராஜ்

ரூபாய் சொத்தை முடக்கியதோடு, எடப்பாடியின் சம்பந்தி வீடுகளிலும் ரெய்டுகள் நடத்தி அதிரவைத்தார். அதனால் இவர் நேர்மையான அதிகாரி என்று கருதவேண்டாம் என்கிறார்கள் சக அதிகாரிகள். காரணம், பா.ஜ.க.வின் உத்தரவை ஏற்று, இவர் நடத்திய இதுபோன்ற ரெய்டு நடவடிக்கைகளால் அரசுக்கு எந்தவித லாபமும் இல்லையாம். ஏனெனில், இவற்றின் அடிப்படையில் உரிய வழக்குகள் போடப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்குப் பெரிதாக எந்தவித சிக்கலும் ஏற்படவில்லை. அவரால் முடக்கப்பட்ட சசிகலாவின் சொத்துக்களில் ஒன்றான போயஸ்கார்டன் இடத்தில்தான், தற்போது அவர் பங்களா கட்டி வசித்துவருகிறார். சேகர் ரெட்டியும் பெரிய தண்டனை எதுவும் இல்லாமல் வழக்கிலிருந்து வெளியே வந்துவிட்டார். சும்மா மிரட்டலுக்காக பா.ஜ.க.வின் ஏவலாளியாக அவர் செயல்பட்டதால்தான் இப்படி என்கிறார்கள். இப்படிப்பட்ட தங்கள் விளையாட்டு பொம்மையைத்தான், சில நோக்கங்களுக்காக விஜய் கட்சிக்கு பா.ஜ.க. அனுப்பி வைத்திருக்கிறது என்கிறார்கள் விபரமறிந்தவர்கள்."

முன்னாள் அமைச்சர் பொன்முடி பற்றி நாம் அண்மையில் பேசிக்கொண்ட ஒரு செய்திக்கு மறுப்பு தெரிவிச்சிருக்காங்களே?"

"ஆமாங்க தலைவரே, தி.மு.க. ராஜ்யசபா வேட்பாளர்கள் குறித்து நாம் பேசிக்கொண்ட போது, உடையார் சமூகத்தைச் சேர்ந்த பொன்முடியின் பதவியைப் பறித்ததால், அவர் சமூகத்தினர் சங்கடப்படக்கூடாது என்பதற்காக, அதே சமூகத்தைச் சேர்ந்த சிவலிங்கத்திற்கு ராஜ்யசபா சீட் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று, நம் காதுக்கு வந்த ஒரு தகவலின் அடிப்படையில் கருத்தைப் பகிர்ந்துகொண்டோம். இது குறித்து நமக்கு மறுப்புக் கடிதம் எழுதியிருக்கும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ரூசோ பேரறிவாளன், பொன்முடி உடையார் சமூகத்தைச் சேர்ந்தவர் இல்லை. அப்படி அவர் தரப்பினர் சொல்லிக் கொள்வது உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்திருக்கிறார். இந்த விவகாரம் குறித்து நம்மிடம் பேசிய சிலர், 'பொன்முடி அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்தவர். அதோடு துளுவ வேளாளர் என்ற ஜாதி அடையாளமும் அவருக்கு உண்டு. இவர் சார்ந்த சமூகத்தில் துளு மொழி பேசுகிறவர்களும் உண்டு. அதேநேரம் திருக்கோவிலூர், திருவண்ணாமலை பகுதிகளில் முதலியார், பிள்ளை, உடையார், நயினார் என்ற சில சமூகத்தினருக்கு உடையார் என்ற பட்டப் பெயர் வழங்கப்படுகிறது. இவர்கள் முக்குலத்தோர் சமூகத்தின் ஒரு அங்கம் என்று கூறிக்கொள்கிறார்கள். அகமுடையார்களை பார்க்கவ குல உடையார் சமூகத்தினர் தங்கள் இனத்தில் சேர்த்துக்கொள்வதில்லை. அதேசமயம் அவர் அதிகாரத்தில் இருந்தபோது, அவர்களில் பலர் தங்கள் ஜாதி அடையாளத்தை காட்டி, நிறைய சலுகைகளை அனுபவித்திருக்கிறார்கள்' என்கிறார்கள்."

"தே.மு.தி.க. நிர்வாகிகளின் கூட்டமும் நடந்திருக்கிறதே?"

"தே.மு.தி.க.வின் மா.செ.க்கள் மற்றும் மண்டல செயலாளர்களுடன் ஆலோசனைக் கூட்டத்தை 11ஆம் தேதி நடத்தினார், அக்கட்சியின் பொதுச்செயலாளரான பிரேமலதா. அதில் தேர்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பேசிய மா.செ.க்கள் பலரும், 'கூட்டணி இல்லாமல் நம்மால் ஒரு தொகுதியைக் கூட ஜெயிக்க முடியாது. பிரதான கட்சியுடன் கூட்டணியை உறுதிப்படுத்துங்கள்' எனக் கேட்டுக்கொண்டதுடன், 'வருகிற தேர்தலில் செலவு செய்ய எங்களிடம் பணம் இல்லை, விற்பதற்கு



இந்தியாவின் மக்கள்தொகை 146 கோடியை தாண்டியது -ஐ.நா. அறிக்கையில் தகவல்

சொத்துக்களும் இல்லை. இதனை அம்மா அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்' என்றும் கூறியிருக்கிறார்கள். இதைக் கேட்ட பிரேமலதா, 'உங்களின் பிரச்சினைகளை நான் உணர்ந்திருக்கிறேன். அதற்கெல்லாம் ஒரு தீர்வு கிடைக்கும். நாம் இருக்கும் கூட்டணிதான் ஆட்சியைப் பிடிக்கும். இது உறுதி. அதனால், தேர்தலுக்கு இன்னும் 8, 9 மாதங்கள் இருக்கிறதே என அமைதியாக இருக்காதீர்கள். இப்போதே தேர்தல் பணிகளைத் தொடங்குங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளுக்கான பூத் கமிட்டிகளை அமைத்து அவர்களுடன் ஆலோசியுங்கள். இளைஞரணிச் செயலாளர் விஜய பிரபாகரனுடன் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் வரத் திட்டமிட்டிருக்கிறேன். அப்போது உங்களின் குறைகள் களையப் படும்' என்று சொல்லியிருக்கிறார். எனினும் நிர்வாகிகள் மத்தியில் ஒருவித சோர்வை பார்க்க முடிந்தது."

"மதுரை வந்துசென்ற அமித்ஷா, 'நாம் எடப்பாடியிடம் கவனமாக இருக்கவேண்டும்' என்று மாநில நிர்வாகிகளிடம் சொன்னாராமே?"

"அண்மையில் மதுரைக்கு வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிர்வாகக் குழு கூட்டத்தில் பங்கேற்பதற்கு முன்பாக, மாநில நிர்வாகிகளிடம் தனியாக ஆலோசனை நடத்தினார். அப்போது, 'அ.தி.மு.க.விடம் அதிக எண்ணிக்கையில் சீட்டுகளை நாம் பெறவேண்டும். அதற்கான ஒப்பந்தத்தை சீக்கிரத்தில் போட்டுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் கடைசி நேரத்தில் பா.ஜ.க.வுடன் கூட்டணியை எடப்பாடி முறித்துக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது' என்று நிர்வாகிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அமித்ஷா, 'அ.தி.மு.க.வுடன் நாம் கொண்டிருக்கும் கூட்டணி பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டாம்... கூட்டணி தொடரும், கூட்டணி ஆட்சியும் அமையும். அதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்துவிட்டது. அதிக சீட்டுகளைக் கேட்டு அ.தி.மு.க.வுக்கு நாம் நெருக்கடி தரவில்லை. நீங்களும் அதிக சீட்டுகள் பற்றி முரண்பாடான கருத்துக்களை பொதுவெளியில் பேசக்கூடாது. குறைந்த எண்ணிக்கையில் சீட் கிடைத்தாலும், அவை அனைத்தும் வெற்றி பெறக்கூடிய தொகுதிகளாகத் தான் இருக்கும். இன்னும் அதிக சீட்டுகளைக் கேட்டு பெறுகிற அளவுக்கு, பா.ஜ.க.வை நீங்கள் வலிமையாக வைத்திருக்கவில்லை' என்று தன் ஆதங்கத்தையும் கொட்டினாராம்."

"ஆளுங்கட்சி அமைச்சர் தரப்புக்கும், அ.தி.மு.க. தரப்புக்கும் லிங்க் இருப்பதாக புகார் போயிருக்காமே?"

"ஆமாங்க தலைவரே, மேகா ப்ளூ மெட்டல்ஸில் பார்ட்னராக சேர்த்துக்கொள்ளும்படி அதன் உரிமையாளரை அமைச்சர் தரப்பை சேர்ந்த ஹோட்டல் உறவினர் அப்ரோச் செய்தது பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கோம். அது ஒருபுறமிருக்க, மல்லாக்கோட்டை குவாரி விபத்தில் பலியானவர்களுக்கு குவாரி தரப்பும் தன்னுடைய பங்கிற்கு தலா ரூ. 5 லட்சம் இழப்பீடாகக் கொடுத்தது. இதில் என்ன ட்விஸ்ட் என்றால், அந்தப் பணம் அ.தி.மு.க. தரப்புப் பணம் என்கின்றனர். அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தின் முக்கிய புள்ளி ஒருவர், மதுரை அவனியாபுரத்தை சேர்ந்த முருகக்கடவுள் பெயர் கொண்ட நபரைத் தொடர்புகொள்ள, அவர் தான் பணத்தை கொடுத்திருக்கிறார். பணத்தை பட்டுவாடா செய்தது அமைச்சர் தரப்பு. அமைச்சருக்கும், அ.தி.மு.க.விற்கும் என்ன தொடர்பு? என்று மேலிடத்துக்கு புகாரளித்துள்ளது மற்றொரு அமைச்சர் தரப்பு. இந்நிலையில், சமீபத்தில் அனைத்து குவாரிகளிலும் ஆய்வு செய்த கனிமவளத் துறை, சம்பந்தப்பட்ட அமைச்சரின் கிரஷருக்கு சப்ளை செய்யும் குவாரியில் முறைகேடு நடந்திருப்பதை கண்டறிந்




பிரேமலதா

NKN140625



அமித்ஷாவை சந்தித்த மிளகாய்பொடி வெங்கடேசன்

# அமித்ஷாவை சந்தித்த கிரிமினல்!

சங்கர்லால்

துள்ளது. இந்த குவாரி, அமைச்சரின் பினாமி என்பதற்கு டிரான்சிஸ் சீட்டை ஆதாரமாக வைத்துள்ளது உளவுத்துறை. இதில் வேடிக்கை என்னவென்றால், அமைச்சரே கனிமவளத்துறை அதிகாரிக்கு போன் செய்து, அந்த குவாரி மீது நடவடிக்கை எடுக்கவேண்டாமெனக் கூறியதும் அம்பலமாக, அதுவும் தலைமைக்கு புகாராக சென்றுள்ளது.''

''அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளரிடமே டி.எஸ்.பி. ஒருவர் பாலியல் சீண்டல் செய்தது சர்ச்சையாகியிருக்கே?''

''ஆமாங்க தலைவரே, பெற்ற அன்னையின் துணையோடு மகளை சித்தப்பனே பாலியல் சித்ரவதை செய்துவிட்டு, மகளின் இன்ஸ்டாகிராம் நண்பர்களின் மீது விருத்தாச்சலம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த விவகாரத்தை விசாரித்த இன்ஸ்பெக்டர் மீது அதே பகுதியிலுள்ள டி.எஸ்.பி.க்கு ஒரு கண்! அவரது பேச்சுக்கு இன்ஸ்பெக்டர் மசியாத நிலையில், பெண்ணிடம் பாலியல் சித்ரவதை செய்த விவகாரத்தில் அப்பெண்ணின் இன்ஸ்டாகிராம் நண்பர்கள் 6 பேரில் ஒருவரின் பெற்றோரை அழைத்திருக்கிறார் டி.எஸ்.பி. அவர்களிடம், இன்ஸ்பெக்டர் பணம் வாங்கியதாகப் புகாரளிக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் உங்கள் மகன் ஜெயிலுக்குள் போக நேரிடுமென்றும் மிரட்டியிருக்கிறார். அதோடு, இன்ஸ்பெக்டரையும், 'உன்மீது புகார் வந்திருக்கு, இனியாவது புரிஞ்சு நடந்துக்கோ' என்று மடக்கப் பார்க்க, அவரை கடுமையாகத் திட்டியிருக்கிறார் இன்ஸ்பெக்டர். உடனே கடுப்பாகி, இன்ஸ்பெக்டர்மீது புகாரை பதியச்செய்து சஸ்பெண்ட் செய்யவைத்தி ருக்கிறார் டி.எஸ்.பி. அந்த டி.எஸ்.பி. ஏற்கெனவே கடந்த ஆண்டு திருச்சியில் ஒரு பெண் ஏட்டுவிடம் பாலியல் சீண்டல் செய்த விவகாரத்தை நமது நக்கீரனிலேயே எழுதியிருக்கிறோம். அதேபோல், நாகப்பட்டினத்தில் பெண் எஸ்.ஐ.யிடம் லீலையில் ஈடுபட்டு, அவரது குடும்பத்தினரே இவரைப் பிடித்து சர்ச்சையாகியிருக்கிறது. நெடுஞ்சாலைத்துறையில் உயரதிகாரியான இவரது மாமனாரே இவரை காப்பாற்றி வருகிறாராம்!''

''சென்னை ரவுடிகளை ஒடுக்கிவந்த தெற்கு இணை ஆணையர் சிபி சக்கரவர்த்தி மாற்றப்பட்டிருக்கிறாரே?''

''ஆமாங்க தலைவரே, சென்னை மாநகர காவல் துறை (கிண்டி) தெற்கு இணை ஆணையாளராகப் பணிபுரிந்த டி.ஐ.ஜி. சிபி சக்கரவர்த்தி, தற்போது தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறார். குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் திறமையான அதிகாரி என பெயரெடுத்தவர். அண்மையில் செயின் பறிப்புக் குற்றவாளிகளை ஆந்திரா வரை துரத்திச்சென்று கைது செய்தார்.இவரை ஆவடி சரக இணை ஆணையாளராக நியமிக்க

காசாவில் நிவாரண உதவி மையம் அருகே இஸ்ரேல் தாக்குதல் -25 பேர் உயிரிழப்பு



## இறுதிச் சுற்று!

# விமான விபத்து! பயணிகள் கதி?

குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து வியாழனன்று (12-6-2025) மதியம் 1:30 மணிக்கு லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளாகியது. இந்த விமானத்தில் பயணிகள் 242 பேர் உட்பட 254 பேர் இருந்தனர். விமானம், ஏர்போர்ட் பின் சுற்றுச்சுவரில் மோதியதால் இந்த விபத்து எனக் கூறப்படுகிறது. விமானம் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதியில் விழுந்ததால், அப்பகுதி மக்களும் பாதிக்கப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.





மீட்புப் பணி

குஜராத் மாநில அரசு மீட்புப் பணிகளை வேகப்படுத்தி வருகிறது.

விமானம் விழுந்த இடத்தில் தீயுடன் புகை மண்டலமாக காட்சியளிக்கிறது. பாதிக்கப்பட்ட வர்கள் அகமதாபாத்தின் தனியார், அரசு மருத்துவ மனைகளுக்குக் கொண்டுசெல்லப் படுகின்றனர். குஜராத்தின் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி அதில் பயணித்தார் என்றொரு உறுதி செய்யப் படாத தகவலும் நிலவுகிறது. **-கீரன்**

விரும்பினார் சிட்டி கமிஷனர் அருண். ஆனால் சிபி சக்கரவர்த்தியோ தொடர்ந்து பரபரப்பாக இயங்க முடியவில்லை. குடும்ப ரீதியாக கொஞ்சம் ரிலாக்ஸ் தேவைப்படுகிறது என்று கேட்டுக்கொண்டதால் அவரை பணிமாறுதல் செய்திருக்கிறார்களாம்."

"டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் ஏடாகூட நியமனம் ஒன்று நடந்திருக்கே?"

"ஆமாங்க தலைவரே, டெல்லியில் உள்ள தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு இல்லத்தின் மேனேஜராக, கணேசன் என்பரை நியமித்திருக்கிறது தி.மு.க. அரசு. அந்தப் பதவிக் குரிய கல்வித் தகுதி இவருக்கு இல்லை என்றும், இவர் மீது ஏகப்பட்ட வில்லங்கப் புகார்கள் இருக் கிறது என்றும், தமிழக அரசின் பொதுத்துறைக்கு முன்னதாகவே புகார்கள் சென்றுள்ளன. ஆனால், அதன் உண்மைத் தன்மையை ஆராயாமல், உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரின் சிபாரிசில் தமிழக அரசின் தலைமைக்கு தெரியாமலே, அவரை நியமனம் செய்துள்ளனர். இது டெல்லியில் உள்ள தமிழக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மத்தியில் சர்ச்சை யாகி வருகிறது. இது ஒருபுறம் இருக்க, தமிழ்நாடு இல்லத்தின் ரெசிடெண்ட் கமிஷனராக இருப்பவர் ஆஷிஸ்குமார் ஐ.எ.எஸ். இவர்தான் தமிழ்நாடு இல்லத்தில் ஆகப்பெரிய அதிகாரம் பெற்றவர். ஆனால் கணேசனோ, இனி நான்தான் ரெசி டெண்ட் ஆக்டிங் கமிஷனர். அதனால், தமிழகத்தி லிருந்து வரும் அனைத்து தகவல்களும் எனது கவனத்துக்கும் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொல்லி வருவதோடு, ரெசிடெண்ட் கமிஷனர் ஆசிஸ் குமாரின் அறையைப் போலவே தனது அறையை யும் பல கோடி ரூபாய் செலவில், நவீனமாக்கி வரு கிறாராம். இதுகுறித்து தமிழக லஞ்சஒழிப்புத் துறை யிடம் முறையிட சிலர் முயற்சித்து வருகிறார்களாம்."

"நானும் அமித்ஷா தொடர்பான ஒரு முக்கியமான தகவலைப் பகிர்ந்துக்கறேன். அமித்ஷா தமிழகம் வந்தபோது அவரை ஆந்திராவிலும், தமிழ்நாட்டிலும் 66 வழக்குகள் கொண்ட, முன்னாள் ரவுடி மிளகாய்ப்பொடி வெங்கடேசன் சந்தித்தது பெரும் சர்ச்சையை எழுப்பிவருகிறது. அவர் யார் வழியாக அமித்ஷாவை சந்தித்தார் என்கிற விசா ரணைகளும் நடக்கிறது. வினோஜ் என்கிற பா.ஜ.க. பிரமுகர், வெங்கடேசனை அமித்ஷாவின் வரவேற்புக் குழுவில் போட்டு, இதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தார் என்கிறது கமலாலயத் தரப்பு. இது தொடர்பான புகைப்படங்களும் சமூக ஊடகங்களில் வலம்வருகின்றன. இந்தத் தகவலை உளவுத்துறை வழியாக அறிந்து அலறிய, மத்திய உள்துறை அமைச்சகம், இதை அமித்ஷாவின் காதுக்கு கொண்டு போனதும், அவர் தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளைத் தொடர்புகொண்டு இது குறித்து கடுமையாக விசாரித்திருக்கிறார். இதைத் தொடர்ந்து, பா.ஜ.க. நிர்வாகிகள் சிலர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது என்கிறார்கள்."

பிரான்சில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைத்தளம் பயன்படுத்த தடை

# கூட்டணி ஆட்சி! அமித்ஷாவுடன் மோதும் எடப்பாடி!

அ.தி.மு.க. -பா.ஜ.க. உறவு மிகப்பெரிய சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது. கூட்டணி ஆட்சி என்று மதுரையில் நடந்த கூட்டத்தில் அமித்ஷா பேசியதற்கு அ.தி.மு.க.வின் மாஜி அமைச்சர்கள் உதயகுமார், செல்லூர் ராஜு, ராஜேந்திர பாலாஜி ஆகியோர் பதில் அளித்திருக்கிறார்கள். 'தமிழகத்தில் கூட்டணி ஆட்சி வர வாய்ப்பில்லை. அ.தி.மு.க. கூட்டணி கட்சிகள்தான் ஆட்சியைப் பிடிக்கும்' என்றார் ராஜேந்திர பாலாஜி. "எடப்பாடி தலைமையில் உள்ள கூட்டணிக்கு மாபெரும் வெற்றியைத் தர தமிழக மக்கள் தயாராகி விட்டார்கள். இதில் யார் குழப்பங்கள் ஏற்படுத்தினாலும் எத்தனை திசை திருப்பினாலும் இந்த விசயத்தில் எடப்பாடியும் நாங்களும் தெளிவாக இருக்கிறோம்" என உதயகுமார் பேசியிருக்கிறார். அதேபோல் செல்லூர் ராஜுவிடம் அமித்ஷா பேச்சு குறித்து கருத்துக் கேட்டபோது 'எடப்பாடிதான் முதலமைச்சர்' எனச் சொல்லி விட்டார். இவர்களின் பேச்சு எடப்பாடியின் குரலாகத்தான் ஒலித்தது. ஆக, கூட்டணி ஆட்சி விஷயத்தில் அமித்ஷாவுடன் மோத எடப்பாடி தயாராகிவிட்டார்.





தே.மு.தி.க. சென்னையில் கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியது. அந்தக் கூட்டம் முடிந்ததும் பேட்டியளித்த பிரேமலதா, "கூட்டணி குறித்து முடிவுசெய்ய கால அவகாசம் உள்ளது. காங்கிரஸ் இண்டியா கூட்டணியில் இணைய அழைப்பு விடுத்துள்ளது. தி.மு.க. அழைத்தால் கூட்டணிக்கு செல்வீர்களா என கேட்கிறீர்கள். அந்தக் காலம் வரும்போது பதிலை சொல்கிறோம்.

## துணைவேந்தர்கள் நியமனத் திருத்தச் சட்டத் தடை வழக்கு: கோடை விடுமுறைக்குப் பின் ஒத்திவைப்பு

தே.மு.தி.க. தனித்துப் போட்டியிடவும் தயங்காது. கூட்டணி குறித்து தற்போது எதுவும் சொல்ல முடியாது" என்றார் பிரேமலதா. 2026ல் கூட்டணி ஆட்சிதான் என்கிறார் டி.டி.வி. "தமிழ்நாட்டில் வரும் சட்டசபை தேர்தலில் ஈ.பி.எஸ். தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும்" என்கிறார் நயினார் நாகேந்திரன். இதற்கிடையே எடப்பாடி முன்னிலையில் அமித்ஷா பேசிய பேச்சின் முழு வடிவத்தை பா.ஜ.கவின் இணையதளம் வெளியிட்டுள்ளது. அதில் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி மற்றும் கூட்டணிக் கட்சிகளுடன் அமைச்சரவையில் சீட்டு பங்கீடு என தெளிவாகவே அமித்ஷா குறிப்பிட்டிருக்கிறார் எனச் சொல்கிறது பா.ஜ.கவின் இணையதளம்.

இவை எதற்கும் அ.தி.மு.க. பதில் சொல்லவில்லை. ஓ.பி.எஸ்., சசிகலா, டி.டி.வி. தினகரன் ஆகியோரை கூட்டணியில் எப்படி சேர்ப்பது, அவர்களுக்கு என்ன தொகுதிகள் ஒதுக்குவது என்பது குறித்து அ.தி.மு.க. முடிவு செய்யவில்லை. அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தபிறகு இரண்டு முறை தமிழகத்திற்கு வந்த அமித்ஷா ஓ.பி.எஸ்.ஸை அழைத்துப் பேசவில்லை. பிரதமர் மோடியின் விழாவிலும் ஓ.பி.எஸ். கலந்து கொள்ளவில்லை. அதனால் அவரை தனிக்கட்சி ஆரம்பிக்குமாறு அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். மதுரை தொடங்கி ராமநாதபுரம் வரை தனது ஆதரவாளர்களை வலுவாக வைத்திருக்கும் ஓ.பி.எஸ்., தென் மாவட்டங்களில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் வலுவான சேதத்தை ஏற்படுத்துவார். அவரை கூட்டணிக்குள் வைத்திருக்க பா.ஜ.க. விரும்புகிறது. ஆனால், எடப்பாடி விரும்பவில்லை. தஞ்சை மண்டலத்தில் சசிகலாவின் தாக்கம் மிக அதிகமாக இருக்கும். அவரையும் அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணிக்குள் வைத்திருக்க பா.ஜ.க. விரும்புகிறது. எடப்பாடி அதை ஏற்காததால் திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கிறார் சசிகலா.

வட மற்றும் மேற்கு மாவட்டங்களில் வலுவான கட்சியாக விளங்கும் பா.ம.க.வில் நிலவும் அப்பா - மகன் சண்டையை முடிவுக்கு கொண்டுவர பா.ஜ.க. விரும்புகிறது. அதில் கூட்டணிக் கட்சித் தலைமை என்ற அடிப்படையில் தலையிட்டு ஒரு தீர்வைச் சொல்ல அ.தி.மு.க. தயாராகிறது. அ.தி.மு.க. கடந்த சட்டமன்றத் தேர்தலில் கொடுத்த பணத்தை மையப்படுத்திதான் பா.ம.க.வில் தகராறு நடக்கிறது. அதில் அ.தி.மு.க. தலையிட ஏன் தயங்குகிறது என கேள்வியெழுப்புகிறார்கள் வன்னியர் சமூகத்தை சேர்ந்த அ.தி.மு.க.வினர்.

தே.மு.தி.க.விற்கு ராஜ்யசபா சீட் கொடுப்பதில் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றிதான் பிரேமலதா அதிருப்தி தெரிவிக்கிறார். அதைப்பற்றி பேசுவதற்கு அ.தி.மு.க. தயாராக இல்லை என்பதால் பிரேமலதா கூட்டணியை விட்டுப் போகிறேன் என்கிறார். இந்தப் பிரச்னைகள் அனைத்திலும் முக்கிய மையப் புள்ளியாக இருப்பவர் எடப்பாடிதான். அவர் தானாக முன்வந்து ஒவ்வொருவரிடமும் பேசினால் பிரச்னை முடிவுக்கு வந்துவிடும். ஆனால், எடப்பாடி அதற்குத் தயங்குகிறார். இதனால் ஒட்டுமொத்த அ.தி.மு.க. கூட்டணியே கலகலத்துப் போயிருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் நாள் இருக்கிறது. அதற்குள் பேசி கூட்டணி பிரச்னைகளுக்கு முடிவு எட்டப்படும் என்கிறது அ.தி.மு.க. தலைமை.

அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள குழப்பங்களை மறைக்க தி.மு.க. கூட்டணியிலிருந்து ஒரு கட்சி அ.தி.மு.க. கூட்டணிக்கு வருகிறது என பா.ஜ.க. கொளுத்திப் போட்டிருக்கிறது. மதுரைக்கு வந்த அமித்ஷாவுடன் அறுபது வழக்குகளில் தொடர்புள்ள ரவுடி மிளகாய்ப்பொடி வெங்கடேசன் சந்திப்பு நடத்தி அதை டிவிட்டரில் வெளியிட்டது மிகப்பெரிய விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பொழுது அ.தி.மு.க. கூட்டணியில் நிலவும் குழப்பங்களைப் பார்த்தால் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி நிலைக்குமா என்கிற சந்தேகம் உருவாகி இருக்கிறது என தி.மு.க. வட்டாரங்கள் செய்தி பரப்ப ஆரம்பித்துள்ளன.

**-தாமோதரன் பிரகாஷ்**

NKN140625

PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025 Date of Publication on posting : Every Tuesday & Friday






advt